[illegible]
V2. No. 5. 31/[illegible]/1929

X
ത211, M28KA
N29.2.5
189040

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ ஜனவரி௴ 31௳ [No. 5.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 81
2. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A., B. L. 83
3. அப்பர்
E.N. தணிகாசல முதலியார் B. A., B. L. 85
4. பிளோதைனன்
T. R. இராஜகோபால் 87
5. தமிழ்ப் பாடம் 89
6. வில்லிபாரத விளக்கம்.
T. S. நடராஜ பிள்ளை B. A., B. L. 91
7. கவிதாலோகம்—R. முத்தையர் 93
8. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B.A., B.L. 95
9. வர்த்தமானம் 99

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாளுலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி இல் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங் தென்னுப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்.

செய்வதிற் சொல்வதே யரிது.

வழக்கத்தில் நாம் பேசிவருகின்ற சில மொழிகளைப் போல மோசஞ்செய்கின்ற வஞ்சனை வேறெதற்கும் யாவருக்கும் இல்லை. சாதாரணமாக "ஒன்றினைச் சொல்வது எளிது, செய்வது அருமை," என்று சொல்லி விடுகின்றோம். அல்லது, "என்ன செய்யவேண்டுமென்பது என் மனதிற்கு நன்றாகத் தெரிகின்றது, சொல்லத்தான் வரவில்லை" என்று யாவரும் ஒருகால் அல்லாக்கால் ஒருகால் கூறுவதையுங் கேட்டிருக்கின்றோம். மெய்யோ இவைகளுக்குமாறாக இருக்கிறது. ஒன்றினைச் செய்வதைக்காட்டிலும் செய்யப்போவது இதுவென இயம்புவதே வாஸ்தவத்தில் இயலாத செய்தியாம். அவ்வாறே நினைத்ததைச் சொல்வது கடினமன்று; சொல்லவருவது இன்னதென எண்ணத்தில் ஏற்படுத்திக்கொள்வதே கடினம்.

இதனுண்மையை இக்காலம் உலகெங்கும் நடைபெற்றோங்கும் சீர்திருத்த இயக்கங்கள் ஒவ்வொன்றிலும், முன்னேற்ற முயற்சி ஒவ்வொன்றிலும், நமது பகுத்தறிவைக்கொண்டு ஆராய்வோமாயின், வெகு எளிதில்காண இயலும். அரசியல் திருத்தங்களைப்பற்றியேனும், கலியாணம் கல்வி போன்ற ஜனவாழ்க்கைச் சீர்திருத்தங்களைப் பற்றியேனும், மற்று, நாட்டின் முன்னேற்றத்திற்கு அமைந்ததெனக் கருதப்படுகின்ற பல்வேறு துறைகளைப் பற்றியேனும் பேசுவோர், சுயநலம் கருதாது தாம் எல்லாவற்றையும் நாட்டின் நலத்தின்பொருட்டு அர்ப்பணஞ்செய்யச் சித்தமாயிருப்பதாகக் கூறி, மற்றவரையும் அவ்வாறு செய்விக்க முயல்கின்றனர்.

இன்னவர்களுள்எண்ணிறந்தோர் தந்நலங்கருதாது தியாகஞ் செய்வதற்குச் சித்தமாயிருப் பவர்களும் இருக்கின்றனர். அவர்களால் அவ்விதத்தியாகஞ் செய்யுமாறு தூண்டப்பெறுகின்ற மாந்தர்களும் கணக்கிறந்தோரே. ஆயினும், ஏன் நினைத்தபடி ஒன்றும் முன்னேற்றமும் சுகமுங் காணவில்லை? இந்தத் தியாகத்தால் எந்தவெந்தக் குறைகளைக் களையவேண்டுமென முயல்கின்றனரோ அவைகளே ஏன் மேன்மேலும் வளர்ந்து வருகின்றன? அவரவர் சுயநலம் கருதாது எல்லாச் சாதியார்களும் எல்லா மதத்தவர்களும் எல்லாக் கட்சியினரும் ஒற்றுமையா யிருக்கவேண்டுமென்பவர். ஆம்; ஓரிருபது ஆண்டுகளுக்குமுன் இருந்த ஒற்றுமையில் பெரும்பகுதி இப்பொழுது குறைந்தே போயிற்றென்பது பிரசித்தம். கல்வி எங்கெங்கும் யாவருக்கிடையும் பரவவேண்டுமென்பர். முன், கல்வி யில்லாதிருந்தவரும் உண்மையிற் கற்றவராயிருந்தனர். இன்று, கலைசாலைப்பட்டங்கள் பெற்றவர்களுள் பலரிடத்தில் கல்விகற்ற குறியைக்கூடக் காண்கிலேம். தேசத்தின் செல்வம் பெருகவேண்டும்

என்பர். முன் ஏழைகளுக்கும் வறுமை தெரியாது, இப்பொழுது பணக்காரர்களுக்குத்தான் வறுமை அதிகம். இப்பொழுது மதப் 'பிரசாரங்கள்' முயன்று நடை பெறுகின்றன—தம்மூரில் கோவில் என்று ஒன்று இருந்ததென ஜனங்கள் நினைத்தது முன்னுட்களிலேயே. இவையெல்லாம் கைப்புண்ணிற்குக் கண்ணுடி வேண்டாச் செய்திகள்.

இப்படி நினைத்ததொன்றும் நிறைவேருது போவது மன்றி நலங் குறைந்துகொண்டும் வருவதற்குக் காரணம் எது வென வினவுவோமாயின், "ஜனங்களிடையில் சுயநயம் ஊறி அழுந்திக்கிடக்கத் தியாகங்களைச் செய்யுங்களென நாங்கள் சொல்வதை அவர்கள் எளிதில்கேட்கின்ருர்களா? ஆகையாற்ருன் குறித்த பயன் இன்னுங் கைகூடவில்லை" என்று தலைவர்களும், "நம் தலைவர்கள் தியாகம் செய்யவே முன்வந்திருப்பதாக எளிதில் கூறிவிடுகின்றனர். உள் நுழைந்து பார்த்தால் அங்கங்கே ஒரு சுயநலம் ஒளிந்து கிடக்கும்· அதனுற்ருன் நம் முயற்சி யொன்றும் நிறைவேறுவதில்லை. எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்துவிடுவதாக நம் முன்னிலையில் வாக்களிப்பது சுலபம்; ஆனுல் அப்படிச்செய்ய ஒரு மனிதனுலும் இயலாது" என்று ஜனங்களும், இன்னவிதமே தலைவர்கள் தங்களுக்குள்ளேயும் சமாதானம் சாற்றுவார். இந்தச் சமாதானங்களில் ஒருவகையில் உண்மை யிருக்கின்றது; ஒரு வகையில் இல்லை. உரைத்தபடி இருதிறத்தோறும் நாட்டிற்கென்று பெரிதும் தியாகங்கள் ஒன்றும் செய்வதில்லை என்பது உண்மை. அவ்வாறு அவர் தியாகஞ் செய்யாததற்குக் காரணம் ஆழ்ந்தவோர் சுயநலப் பேரவா என்றது உண்மையன்று.

ஆயின், இவ்வகை உடல் பொருள் ஆவி யாதிய உடைமைகளைத் தியாகஞ் செய்கின்றே னென்று சொல்வோ ரெல்லாம் பொய்யரோ வெனின், இல்லை, இல்லை. அவர்கள் தம் வார்த்தையைப் பொய்யாக்கவில்லை; வார்த்தைதான் அவர்களைப் பொய்ப்படுத்தியது. அவர்கள் சொல்லியபோது மனப்பூர்வமாகவே சொல்லினர். ஆனுல்—நாம் கூறுவது விபரீதம்போல் தோன்றும்—மனப்பூர்வமாய் ஒன்றினைச் சொல்லும் போதுதான் அம்மனமானது சொல்வதின் உண்மை நிலையை அறியமாட்டாது. இராமன் என்பான் ஒருவனைப் பார்த்து 'உன் பேர் என்ன' என்று வினவுவோமாயின், "இராமன்" என்று பதில் உரைக்கும்போது அவன் உண்மையை உரைக்கின்ருன் என்னும் நினைவு அவனுக்கு அப்பொழுது இருக்கநியாயமேது? அன்னவாறே "தியாகங்கள் செய்வதற் கிருக்கின்றோம்" என்பவர்கள் நிஷ்கபடமாய்வஞ்சனையின்றி மனப்பூர்வமாகச் சொல்கின்ருர்க ளாதலாற்ருன் தாம் சொல்வது மெய்யோ பொய்யோவென உன்னி உரைக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகின்றதில்லை.

ஆதலின் நாட்டினது நன்மைக்காகத் தியாகங்கள் செய்கின்றோம் என்று முன் வந்திருப்பவர்கள் கபட நாடகம் நடிப்பவர்களல்லர். ஏதோ செய்யத்தான் வேண்டுமெனுமுத்தேசம்அவர்களுக்குண்டு. ஆயினும் தியாகங்கள் என்று மதித்து உரைப்பதற்கொத்தனவைகளும் அவர்களிற் பெரும்பாலோர்செய்வதில்லை. இது, சொல்வதைக் காட்டிலும் செய்வது அருமையான காரியமா யிருப்பதனுலன்று. மற்று, எதனுலெனின், தியாகம் என்பதன் தன்மை இன்னதென்றும், எவ்வகைத்தாய தியாகங்கள் இந்நாட்டின் நலத்திற்கு ஏற்றவை யென்றும் சொல்லத் தெரியாமையே. இதனுண்மையை நாம் உணர வேண்டுமாயின் அர்ப்பணத் தலைவர்களாய் விவகரிப்போர்தம் வாய்ச்சொற்களை நாம் உற்றுக்கேட்டு ஆராய்தல் வேண்டும். கேட்போர் செவியைக் கவர்ந்துகொள்ளும் வீரமொழிகளுக்குரிய நாவன்மையைச் சற்றே மறந்து, நாம் அவர்கள் உரைக்கும் ஒவ்வொரு சொல்லையும் எடுத்துக்கொண்டு அச்சொற்களுக்கு இயற்கையாய பொருளைப்பற்றி நுண்ணிதின் நோக்குங்காலையில் தியாகத்தின் தன்மையே இன்னதென்று அவர்களிற் பெரும்பான்மையோர்க்குத் தெரிந்ததில்லை என்பது புலப்படும். ஒருவன் அருமையாய்த்தேடித் தனது உடைமையாக வைத்துக்கொண்டு இருக்கின்ற ஒரு பொருளால் வரும் சுகத்தைத் தான் அனுபவிக்காமலும், அப்பொருளைத் துறப்பதால் தனக்குத் துன்பம் வரக்கூடிய நிலையிலும், அந்தப் பொருளை அவன் தனக்கென வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களுக்கு அளித்து அதற்குரிய சுகமும்நன்மையும் அவர்களை அடையும்படி செய்வது தியாகம். தான் ஒன்றை அனுபவியாது விட்டுவிடுவது மாத்திரம் தியாகம் ஆகாது. நமக்கு வேண்டா என்று விடுவது துறவு. துறவினை மேற்கொள்வோர் அதனுல் தமக்கு உலகத்துன்பங்கள் நீங்க வேண்டுமென்றோ, மறுமையின்பம் எய்த வேண்டுமென்றோ கருதி விலகரிக்கின்றனர். தியாகிகள், தமக்கு அருமையாயிருப்பதை விடுவதால் தமக்குத் துன்பமே என்றுணர்ந்து அத்துன்பத்தைத்தாம் அனுபவிக்க இசைந்து, தம்மால் விடப்பட்ட அப்பொருள் அளிக்கவல்ல நலத்திற்கு மற்றவர்கள் பாத்திரராகும்படி செய்யுந் தன்மையர். தியாகம் என்பதின் இவ்விலக்கணத்தை நன்ருக மனதில் நிறுத்தி நாம் வைத்துக்கொண்டு, "தியாகங்கள் செய்ய வருகின்றேன்" என்று எதிர்வரும் ஒவ்வொருவரையும் "ஐய, நீர், எதைத் தியாகம் எதன்பொருட்டுச் செய்ய இருக்கின்றீர்", என்று கேட்டுக்கொண்டு வருவோமாயின், எத்தனைபேர் பதிலொன்றுஞ் சொல்லமாட்டாமல் திகைக்க நேர்கின்றதென்பது தெரியலாகும்.

OFFICE OF THE ... 1929 MADRAS

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

காதலர் காட்சி கோசிக னுணர்வான்.

65 பக்கத் தொடர்ச்சி.

இராமனுஞ் சீதையும் இன்னவாறு ஒருவரையொருவர் கண்ணுற் பருகி இன்பத்துளாழ்ந்த அச்சமயத்தில் அன்னம்மாடும் முன்துறைகண்டு இவனோடுநின்ற மற்றிருவர் யாது புரிந்திருந்தனர் என்பதை நுனித்துரைத்தலருமைபா யிருக்கின்றது. மின்னரசெனுும்படி ஒரு மடவரல் கன்னிமாடத்தி லியங்கினுளென்பதைக் கோசிகன் ஒருவாறுஉணர்ந்திருத்தல் வேண்டும் அந்நிமிடத்திலேயே அண்ணல் இராமனது கண்கள் அவள்பால் தைத்ததையும் தெரிந்துகொண்டான். காதலர் காட்சி இனிதின் நிகழ்கின்றதென்பதை ஓர்ந்தனன். இளையோர் காதலுக்கு முதியோர், அவர் முனிவரே யாயினும், இடையூறு செய்யார் ஆதலின், விச்வாமித்திரன் இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு வேறெதனையோ பார்க்கின்ற பாவனையால் சற்றே விலகிச் சென்றனன் போலும். இதனுல் மற்றச் சீதையின் அழகு முழுவதையும் நோக்கி நிற்கக் கோசிகனுக்கு இயலாத தாயிற்று. எனினும் கன்னிமாடத்தில் தெரிவையர் பலர்தொழத் தோன்றிய பான்மையால் அன்னுள் ஜனகன்மாமகளே என்று இராமனைப்போன்றே இவனும் உணர்ந்திருப்பான் அவளைநோக்கிய இராமன்நயத்தினுல் அவனது காதற் குறிப்பையும் உணர்ந்தனன். உணர்ந்து, இனி அரக்கர்செய் இடுக்கண்களெல்லாம் தொலைந்ததெனப் பூரித்த உள்ளத்தனுய் அவ்வயின் இறைதாழ்ந்து பின் மைந்தரை அழைத்துக்கொண்டு மறையப்போயினுன்.

ஈண்டு நிகழ்ந்தன இவை யென்பதற்கு இந்நூலின் கண் சில குறிப்புக்கள் உள. குமரரைக் கொண்டேகிய கோசிகன் சதானந்தரைச் சந்தித்து அவர்க்கு இராமனை அறிமுகஞ் செய்துவைக்கின்ற காலையில்,

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளருன்
இடித்த வெங்குரற் ருடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்ருன்.

[தெளிவுறப் பெருந்தவங்கள் செய்துள சதானந்தனே, கேள். இந்தப்பெருமகன்தான், இடிப்பதுபோன்ற கொடிய குரலையுடைய தாடகையின் உடலை அழித்தும், அடுத்திருக்கின்ற என் வேள்வியை நிறைவேற்றியும், உன் அன்னையாகிய அகலிகையின் சாபத்தைத் தீர்த்தும் முடித்து, என்னுடைய நெஞ்சத்தில் இருந்த கவலையையும் நீக்கினுன்]

என்றனன். இவ்வாசகத்தில் அயோத்தியினின்று அகன்றது முதல் அன்று சதானந்தனைக் காண்பது ஈருகவுள்ள காலத்தில் இடைநிகழ்ந்த முக்கிய சம்பவங்களை முறையே கூறிவந்தனனுதலால் தன்னெஞ்சத்து இடர்முடிந்ததெனக் கோசிகன்கூறியது, சீதைபா லவன்கொண்ட காதலைக்குறிப்பதாதல் வேண்டும். 'நின்னன்னை சாபமும் முடித்தான்' என்பதும் சேர்ந்திருப்பதால், "என்னெஞ்சத்திடர்முடித்தான்" என்று பின் சொன்னது முன்சொன்ன மூன்றையும் தழுவிற்றெனக் கொள்ள லமையாது. கோசிகன் இயற்றிய வேள்வியை நிறைவேற்றி, "இன்றியான் செயும் பணியென்கொல் பணி" என வினவி எதிர்நின்ற இராமனுக்கு அம்முனி "பெரிய காரியம் உள், அவை முடிப்பது பின்னர்" என்று இயம்பியதை வேள்விப் படலத்தின் ஈற்றுச்செய்யுளில் காணலாம். அங்கு இவன் மனதிற்கொண்ட காரியம் இராவணனோடு அரக்கர் குலத்தை வேருடன் தொலைப்பதாம். அவ்விராவணவதத்திற்கு, இராமன் சீதையைக் காதலுறக் கண்ணுற்றது முதற்படி யாயிற்று. இனி இராக்கதர் வன்மையழிந்து தனக்கும் தன்னனைய அந்தணர்க்கும் இடரொன்றுமில்லாது தீருமென்பது நிச்சயமானதால், மிதிலைக்குப் புறப்படும்போது 'முடிப்பது' என்று எதிர்காலத்தில் உரைத்த சொல்லையே மீண்டும், காதலர்காட்சி நிகழ்ந்தபின் கோசிகன் 'முடித்தான்' என்று இறந்தகாலத்தில் தெளிவுபற்றி மாற்றிக் கூறினன். பின்னுள், திருமண மண்டபத்தின்கண் சீதை இணையிலாப் பேரழகோடு எய்த நோக்கி,

அச்சென நினைத்தமுத லந்தண னினைந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்ருல்
இச்சிலை கிடக்கமலை யேழையு மிருனே

[இராமனையே உலகின் நல்வாழ்விற்கு ஆதாரமாகக் கருதினவனும், அவனை மிதிலைக்கு அழைத்து வருவதற்குக் காரணமாயிருந்தவனுமான விச்வாமித்திரன், "வளைப் போர்க்கு வாய்ப்பவன், நஞ்சுடைய நீண்ட மலர்போன்ற கண்ணுடைய நங்கை இவளா யிருக்கின்ருளென்ருல், பச்சைமலை யனைய மேனியையுடைய வெற்றி இராகவன், இந்தச் சிவன்வில் கிடக்க ஏழு மலைகளையும் ஒடித்தெறியும் ஊக்க முடையவனுகானே" என்று நினைத்தான்]

என்றனர் கம்பர். தன்னிடர் தீர்ந்ததெனுங் கொள்கையால் இராமனை அச்சென நினைத்தனன் அவ்வந்தணன். சீதையை அவன் கண்டு வியந்திருப்பதை முனிவன் அறிந்துளானுதலால் இராமன் வில்லிறுக்கப்புக்கது கல்வியாலன்று, காமத்தாலென்பதையும் ஓர்வான். சீதையை இராமன் கண்ணுற்று வியந்த காரணத்தால் அவன் இவ்வில்லின் சோதனையை உவந்து ஏற்றனன் என்பது தெரிந்திருந்த தாற்ருன் கன்னிமாடத்தினிலன்னுள் இம்மங்கையைச் சிறிதே பார்க்கநேர்ந்த விச்வாமித்திரன் இன்றவளழகினை முடியக் கண்டு, "இவ்விராமன் அச்சிலையின்பால் செலுத்திய ஊக்கத்திற் குறுபொருள் இப்பொழுதல்லவோ தெரிகின்றது! இத்துணை எழிலாளை எய்துதற்கு இவ்விளவல், சிவன் பிடித்த சிலையன்றி மலைகளே குறுக்கிட்டாலும் அவைகளை முறித்தகற்றல் வியப்பாமோ" என்று எண்ணலாயினுன். இவ்வெண்ணம் பிறப்பது, காதலை யுன்னியே வில்லை இராமன் கை யெடுத்தான் என்பதை உணர்ந்தோர்க்கே இயற்கையாம்.

இன்னபடி முன்னர்ச் சீதையைக் கண்டுங் காணததுமாய கோசிகமுனியோடு இராமன் கன்னிமாடத்தயல் நின்றகன்று மறையப் போயினுன். போவோனைத் தொடர்ந்துடன் செல்லச் சீதையின் மனம் பிய்த்துக்கொண்டு பாய்கின்றது. "வேண்டா, ஏ மனமே, அடங்கி நில். நினக்கிது அழகன்று. கண்டாலிக்குமரனை நீ கண்ட மாத்திரத்தில் பரவசமாகலாமோ! நம்மை வியந்து வந்து காதலைவேண்டிப்

பலநாள் பாராட்டின வற்கன்றே, அவன்பால் நீ விரும்பியேற்கும் அன்பை வலிந்து அவன் பெறுவது போல் அளித்தல் வேண்டும். இதுபெண்மை. நீயாகச் செல்வதால் இப்பொழுதுஎன்பெண்மையைச் சிதைக்கின்றாய்'' எனத் தன்மனதைத் தகைந்து கொண்டனள். ஆயினும் என்!

பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே.

[மணங் கமழ்கின்ற மாலையைத்தரித்த இராமன், அவளது பார்வைக் கெட்டாமல் மறைந்ததும், அவள் மனம் ஆகிய மதயானையினால், அதனை அடக்குதற்கு உபயோகித்த நிறை என்னும் அங்குசம் வளைவு நீங்கி நேராக நிமிர்ந்து போய் விட்டது. இனி, பிறைபோலும் நெற்றியை யுடையவளது பெண்மை என்னவாகும்]

அங்குசம் நிமிர்ந்தபின் ஆனை அடங்குவதெங்ஙனம்!

தன்னிறை காக்கலாற்றா அத்தெரிவைக்குக் காமநோய் உட்புகுந்து பாலிலிட்ட பிறைபோல் எங்கும் பரந்தது. இந்நோயை உழையிருந்தோர்மாட்டு நுவல்வதற்கில்லை. ஊமையைப்போல் மனதிலே உன்னியுன்னி விம்மினாள். அற்றம் நோக்கி நின்ற அனங்கனும் இச்சமயம் எரிகின்ற நெருப்பில் விறகு இட்டது போல் தன் தாமரை மலர்ப்பாணத்தை அவள் மனதில் தைக்கும்படி எய்தனன். அவளோ கூந்தலும் ஆடையும் நெகிழ்ந்து சோரத் தழல்பட்டவோர் பூங்கொடிபோல் வாடினாள். வாடித் தன் மேகலையும் மேலாடையும் தன்னிலைகாக்குந் தன்மையும், கையணிந்த வளையலும், உள்ளத்தின் ஒளியும் மேனியின் நிறமும் யிழந்த வறியளாய்க் கிடக்க, இவ்வேறுபாடு கண்டு வியந்த தோழியர் முதலாயினோர் வியாகுலத்தோடும் இம்மயிலனையாளை அரிதிற் கொண்டுபோய்த் தாதும் தளிர்களும் விரவிக்குளிர்ந்த மலர்ப்பள்ளியிற் சேர்த்தனர். நுனிநுதல் அரும்பிய வியர்வை அனலென வுயிர்க்கும் உயிர்ப்பினால் வறள்கின்றது. உடனின்று கனன்ற காமத்தீயினால் அவள் வளர்ந்திருந்த தளிர்களும் மலர்களும் கரிந்து போயின.

இந்நிலைகண்டனர் தாதியர் செவிலியர் தாயர் தமக்கையர் முதலாயினோர், உளம் நடுங்கிப் "பேயோ பித்தமோ, கண்ணெச்சில் கொடுமையோ, என்னவோ இது"வென உளம்நடுங்கிக் கவன்றனராய், உருகுகின்றவப் பொற்பாவைமுன் மலருடன் அயினிநீர் சுழற்றிப் போக்கினர். இன்னவாறிவர் எண்ணியதற் கேற்பச் சிதையும் முன்பின் தொடர்பின்றி, ஸ்ரீராமபிரானது திருவுருவத்தைத் தன் மனதிற்கொண்டு

அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு வல்லவோர் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் கமலங் கண்ணெனும்
வில்லொடு மிழிந்ததோர் மேக மென்னும்

[அணிந்திருந்த அலங்கல் இருளை இரண்டாக வகுத்ததென்று, ஜடையை உன்னிச் செப்புவாள். அவனது இரு புயங்களும் தூண்களல்ல, ஓர் பெரும் மரகத மலையே, என்பாள். தாமரையே கண்ணாயிற்று என்பாள். வானத்திலிருந்து ஓர்மேகம் வில்லோடு தரையில் இறங்கி நடக்கலாயிற்றே, என்பாள்.]

நெருக்கியுட் புகுந்தரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போனவன்
பொருப்புறழ் தோள்புணர் புண்ணி யத்தது
கருப்புவில் லன்றவன் காம னல்லனே

[என்மனதினுள் நெருக்கியுட்புகுந்து எனதுநிறையையும் பெண்களுக்குரிய தன்மைகளையும் ஒன்றாய் என் உயிரோடு சேர்த்து உருக்கிக் குடித்துவிட்டுப் போன இவனது மலையொத்த தோளோடு பழகுகின்ற பாக்கியத்தைச் செய்திருக்கின்ற வில்லானது, கரும்பு வில் அன்று, ஆகையால் அவன் மன்மதன் அல்லன், என்பாள்]

பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வுநா னெங்குங் காண்கிலென்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்.

[பெண்களுக்கியைந்த அழகையும், என்னுடன் பிறந்த நாணமும் எனது உணர்வும், இப்பொழுது எங்கே இருக்கின்றனவென்று நான் எவ்வளவு எண்ணிப்பார்த்தாலும் அவைகளை என்பால் எவ்விடத்திலும் காணவில்லை. மண்ணிலே நடந்து கால்வருந்தப் போன இவன் கண்வழியாக நுழைந்து இவைகளைக் கவர்ந்துகொள்ளும் ஒருகள்வனேயோ !]

இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் னுயிரையும் முறுவ லுண்டதே.

[இந்திர நீலத்தைப்போன்ற இருண்டசிகையும், சந்திரன் போன்ற முகமும், தாழ்ந்த கைகளும், அழகிய மரகதமலை போன்ற தோள்களுமே அல்லாது, இவைகளையெல்லாம் பின்னேதள்ளி அவன் புரிந்த புன்முறுவல் என்னுயிரை உண்டு விட்டதே]

படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமுந்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மதங்கலுழ் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.

[ஒளியொடு கூடி அகன்று விசாலமாய் எனது உயிரைப் பருகும் மார்பும், பெருமைவாய்ந்த தாமரைபோன்ற பாதங்களுமேயல்லாமல், மதம் பொழிகின்ற களித்த நல்ல யானை போல் அவன் நடந்த அந்நடையின் நினைவு எனது உள்ளத்தில் தங்கிக்கிடக்கின்றது]

உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு மெய்ம்மையால்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே யாகல் வேண்டும்.

[சொல்லப்புகுமளவில், வாசனையமைந்த தாமரை போன்ற அவன் கண்கள் இமைத்தலால், தேவலோகத்திலிருப்பவனல்லன். கையில் கட்டமைந்த வில்லும் மார்பில் நூலும் இருப்பதால் அவன் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவோர் குமரனே யாதல் வேண்டும்]

பிறந்துடை நலனிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை யின்னுங் கண்ணிற்கண்
டறிந்துயி ரிழக்கவு மாகுமே கொலாம்.

[என்னுடன் பிறந்து கூடவே கட்டியுள்ள பெண்மை நலன்களும் நிறையும் என்னுமக்காவல் எந்திரங்கள் சுழன்று திரிந்துகாக்கும் என்னுடைய கன்னிமையாகிய பெரிய மதிலைத்தகர்த்து அதனைக் கைக்கொண்ட அவனை இன்னும் ஒருமுறையேனும் கண்ணிற்கண்டு அவன் பெருமை யாவும் அறிந்தபின் எனது உயிரை இழப்பதெனின் இழக்க நேருமோ]

அப்பர்.

2. அப்பர் யௌவனமும் பலசமய ஆராய்ச்சியும்.

2. அப்பர் எவ்வளவுகாலம் சமணராயிருந்தாரென்பதின் ஆராய்ச்சி.

71 பக்கத் தொடர்ச்சி

திருநாவுக்கரசு நாயனார் சமணராய் வாழ்ந்த காலவரையறை நிர்ணயிப்பதற்குத் தக்க ஆதரவுகள், அவர் சமணமதம் விட்டு நீங்கிய நாளினின்று சில நாட்களிற் பாடியவென்று கொள்ளத்தக்க பாக்களே. அக்காலத்திய தென்பதற்கு யாதொரு சந்தேகமுமின்றி யாவாராலும் ஆமோதித்த பதிகம் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் என்னும் பத்துப் பாசுரங்களமைந்த திருப்பதிகமாகும். பல்லவனால் அனுப்பப்பட்ட அமைச்சர்கள் திருவதிகையை யடைந்து "நமது அரசர் உம்மை அழைத்துவரச் சொன்னார்" என்று பகர்ந்தகாலை, அப்பர் தான் வாரேனென்றும், அதற்குக் காரணமும் காட்டிய விடை இப்பத்துப் பாசுரங்களாகும். ஆகையால் இப் பதிகத்திலுள்ள சொற்றொடர்கள் சமணராய் இருந்தநாளில் அப்பர் சமணர்களுடன் எத்தன்மையான சம்பந்தத்துடனிருந்தார் என்பதுமுதலான விஷயங்கள் அநுமானிக்க ஆதரவுகளாகின்றன.

அத்தகைய சொற்றொடர்களாவன :—

(1) "நாமார்க்கும் குடியல்லோம் (2) தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆள். (3) ஊர்கள்தோறும் அட்டுண்பர் இட்டுண்பார் விலக்கார்ஐயம், புகலிடமாகும் அம்பலங்கள் பூமிதேவியுடன்கிடந்தாற் புரட்டாள்....துகிலுடுத்துப்பொன் பூண்டு திரிவார் சொல்லும்சொற் கேட்கக் கடவோமோ? (4) வாராண்ட கொங்கையர் சேர் மனையிற் சேரோம் (5) உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள் (6) உம்மோடு மற்றுமுளராய் நின்றபடையுடையான் பணிகேட்கும் பணியோமல்லோம் (7) நடலையில்லோம் (8) பாராண்டு பகடேறிவருவார் சொல்லும் பணிகேட்கக்கடவோமோ பற்றற்றோமே?" முதலியன. இத்தகைய சொற்றொடர்களைத் திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தில் நோக்குங்காலை, இம்மறு மொழியானபாசுரங்கள்வெற்றுரைபெறுதலும் சமண அமைச்சர்வேண்டுகோளானவற்றிற்குப்பொருத்தமுமானமறுமொழிகளென்றே யெண்ணவேண்டும். தமது அரசனிடம் வரவேண்டுமென்பதற்கு எவ்வெக் காரணங்கள் செப்பினரோ, அவையாவையும் கண்டித்து அப்பர்எதிர்மறை விடைபகன்றனரென்றே நாம் அநுமானிக்க வேண்டியதா யிருக்கின்றது *. ஆகையால் மந்திரிகள் தரும்சேனரைப் பல்லவனுக்குக் குடியென்றும், மாதர் அமைந்த இல்லத்தில் இவரும் மற்றக்குடிகளைப்போல் வாழ்ந்தவரென்றும், அவ்விடம் திரும்புவாராயின் தேகசுகம் முதலியன பெறலாமென்றும் ¶, உறவினரிடம் வந்து சேர்தல் உத்தமமெனக் கூறினரென்றும், அதற்கு மறுமொழியாய்த்தான் இனி நடலைவாழ்விற் கட்டுப்படோமென்றும், "வாராண்ட கொங்கையர் சேர்மனை"யிற் சேர்ந்து"துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும் சொற்கேட்கும் பாசத்தை அறும்படி வீசினோம், இனி எமக்கு உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்" என்றும், திருநாவுக்கரசு விடைபகர்ந்தா ரென்பதே தேவாரத்தில் விளங்கும் விஷயங்களுக்குப் பொருத்தமாகும்.

இதன்றியும் திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தின் பத்தாவது பாசுரத்தை நோக்குவோமாயின், அப்பாசுரம் இராவணன் கையிலையில் கர்வபங்கமடைந்த விஷயம் மொழியாமல் தேவாதிதேவன் "அயனொடுமாற்கு அறிவரிய அனலாய்நீண்ட"விஷயம் உரைத்ததைக்காணலாம். திருமறுமாற்றத் திருத்தாண்டகமுடிவுபோல் பத்தாம் பாசுரத்தில் சிவபெருமான் "திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணுத் தேவன்" என்று குறிப்பிட்டுள்ள பதிகங்கள் அப்பர் தேவாரத்தில் முதல்திருமுறையில்* ஏழும்,† இரண்டாம்திருமுறையில் மூன்றும், மூன்றும் திருமுறையில்‡ ஒன்பதும் உள. அப்பதிகங்களை நாம் நோக்குவோமாயின், சமணரை நீங்கிய அப்பர் நிலைமை எத்தன்மையா யிருந்த தென்பது அநுமானிக்கலாகும். அப்பர் $ தம் கிளைஞரைவிட்டுப் பிரியாதவரென்றும், சிவனிடத்து அன்பால் அவர் குஞ்சிதபாதத்தை மனதிலிறுத்திக் கிளைஞர் வழிச்செல்லும் அசுத்த மனதைக் கடவுள் வழிச் செல்லும் சுத்த மனதினின்று பிரித்ததாயும் கூறுகிறார். தான் அவ்வாறு செய்யத் துணிந்ததைக் கண்டு இவரைப் பலர் பரிகாசம் செய்வதுபோல்

* எத்திக்கு மாய்நின்ற விறைவன் றன்னை
யேகம்ப மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்கும் சமணர் பொய்யில்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துளே யூறும் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே
திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம்

¶ மருந்தி னோடுநற் சுற்றமு மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்த டங்கண்ணி னாளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே.
திருக்கச்சியேகம்பம்-திருக்குறுந்தொகை

* திருவங்கமாலை, திருவாரூர் - பண் - சீகாமரம், கோயிற் றிருநேரிசை, பண் கொல்லி, கோயில்திருவிருத்தம் (81-ம் பதிகம்) திரு ஏகம்பம் - திருவிருத்தம், தனித் - திருவிருத்தம்.

† திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை, திருவாரூர் - திருக்குறுந்தொகை, இலிங்கபுராணம் - திருக்குறுந்தொகை.

‡ கோயிற் பெரிய திருத்தாண்டகம், திருவதிகை வீரட்டானம் - அடையாளத் திருத்தாண்டகம், திருவதிகை வீரட்டானம் - போற்றித் திருத்தாண்டகம், திரு ஆக்கூர் திருத்தாண்டகம், திருவாகைக் காரோணம் திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம் (95)திருமறு மாற்றத் திருத்தாண்டகம்.

$ சேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்றன் பாத நடுப்பட நெஞ்சி னுள்ளே
மாட்டினீர் வாளை பாயு மல்குசிற் றம்ப லத்தே
கூட்டமாங் குவிமு லையாள் கூடநீ யாடுமாறே

"கனைப்பர்', என்றும் தான் சமணநாட்டை நீங்கியது பரம்பொருளின் உண்மையைக் காண்பதற்கன்றி வேறெக் காரணமு மன்றெனவும் மொழிகின்றனர் *

இங்ஙனம்"மன்றத்துப் புன்னைபோல மரம்படுதுயர மெய்தி'யும்†i."ஆசைவன் பாசமெய்தி" அங்குற்றும் இங்குற்றும் ii. ஊசற் கயிறுபோல இருநிலையும் மாறி மாறிக் கடையில் சிவபெருமான் பாதத்தில் அறுகயிறாசலானரென்றும் அப்பர் தன் மனநிலைமையை யிழித்துக் காட்டுகின்றனர். சமணம் துறந்தஞான்று ‡ ஆண் பிள்ளைகளுக்குச் சாதாரணமாயுள்ள காம நோயும், மனைவிமக்கள் மேலுள்ள காதலும் வேரற வில்லையென்றும் வருந்துகின்றார். பிற்காலத்தில் அப்பர் பாடிய பாடல்களில், நல்ல மனைவியுடன் தான் பெற்ற பிள்ளைகளும் தன்னைக் கைவிட்டனரென்றும் $ தான் "மக்களே மணந்த தாரம் அவ்வயிற்றவரை யோம்பும் சிக்குளேயழுந்தி" ஈசன் திறம்படா திருந்ததாகவும் தன்னைத் தான் வெறுத்துக் கூறுகின்றனர். இத்தகைய ¶பாக்களும் மற்றும் ஆங்காங்குத் திருநாவுக்கரசு நாயனர் தேவாரத்தில் காணப்படும்§ பாடல்களையும் ஒருதலைப்பக்ஷமின்றி ஆராய்வோமானல், தேவாரத்தில் நாம் காணும் அப்பர், பெரியபுராணத்தில் காணப்பட்ட அப்பரைக்காட்டினும் பதின்மடங்கு உலக * அநுபவமும், அன்பும்,† ஆராய்ச்சியும், ‡ பொறுமை $ சாந்தம், ¶ தீர்க்க ஆலோசனையும் பெற்ற ஒப்பற்ற மெய்ஞ்ஞானியென்றும், எவ்வித மனிதர்களுக்கும் ஞானம் விளைவிக்கும் சற்குருவென்றும் திண்ணமாய் ஏற்படும். பிறப்பு, மூப்பு, பசி பிணி இறப்பு முதலியன நீங்கி இன்பம் வந்தெய்திடும்

*மனத்தினுற்றிகைந்துநாளு மாண்பலாநெறி கண்மேலே
கனைப்பரா லென்செய்கேனே! கறையணி கண்டத்தானே
நினைத்தனை வேதம் குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அனைத்துநின் னிலயம்காண்பான் அடியனேன்வந்தவாறே
—கோயில் திருநேரிசை— (7)

† i ஆசைவன் பாசமெய்தி யங்குற்றே னிங்குற் றேனுப்
ஊசலாட் டுண்டு வாளா வுழந்துநா னுழித ராமே
தேசனே தேச மூர்த்தி திருமறைக் காடு மேய
ஈசனே யுன்றன் பாத மேத்துமா றருளெம் மானே
- தனித்திருநேரிசை 8.

ii. உறுகயி றூசல் போல வொன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானேன் அதிகைவீ ரட்ட னரே.
- திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை 6.

‡.கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாச
மொழித்திலே னூன்கணேக்கியுணர்வெனு மிமைதிறந்து
விழித்திலேன் வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்கு
அழித்திலேன் அயர்த்துப் போனேன், [கொண்டேன்
[அதிகைவீ ரட்டனரே!!

$ சுற்ற முந்துணை நன்மட வாளொடு
பெற்ற மக்களும் பேண லொழிந்தனர்
குற்ற மில்புகழ் கொண்டீச் சரவனர்
பற்ற லாலொரு பற்றுமற் றில்லையே
-திருக்கொண்டீச்சரம் - திருக்குறுந்தொகை.

¶ மக்களே மணந்த தார மவ்வயிற் றவரை யோம்பும்
சிக்குளே யழுந்தி யீசன் றிறம்படேன் தவமதோரேன்
கொப்புளே போலத் தோன்றி யதனுளே மறைபக்கண்டும்
இக்களேபரத்தையோம்பவென்செய்வான்றோன்றினேனே
—குறைந்ததிருநேரிசை 2.

§ 1.இலவினர் மாதர்பாலேயிசைந்துநா னிருந்துபின்னு
நிலவுநாள் பலவென் றெண்ணி நீதனே யாதி யுன்னை
உலவிநா னுன்க மாட்டே னுன்னடி பரவு ஞானம்
செலவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னரே.
—திருப்புகலூர்-திருநேரிசை 6.

2. பாலனய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனய்க் கழிந்த நாளும்குறிகொளிலாதுகெட்டேன்
சேலுலாம் பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே
—திருக்கொண்டீச்சரம்- திருநேரிசை 9.

3. கற்றதே லொன்று மில்லைக் காரிகை யாரோ டாடிப்
பெற்றதேல் பெரிதும் துன்பம் பேதையேன்பிழைப்பி
முற்றின லைவர்வந்து முறைமுறைதுயரஞ்செய்ய[னலே
அற்றுநா னலைந்து போனேன் ஆரூர்மு லட்டனரே
—திருவாரூர்- திருநேரிசை 8.

[டேன்
4. நிணத்திடை யாக்கை பேணி நியமஞ்செய் திருக்கமாட்
மணத்திடை யாட்டம் பேசி மக்களே சுற்றமென்னும்
கணத்திடை யாட்டப்பட்டுக் காதலா லுன்னைப்பேணும்
குணத்திடை வாழ மாட்டேன் கோவல்வீ ரட்டனீரே.
—திருக்கோவல் வீரட்டானம்-திருநேரிசை 9.

5. எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போகநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டுழுதை நெஞ்சமி தென்படு கின்றதே.
—தனிக்குறுந்தொகை 10.

* கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிக்கவித் தாளும ரசிலும்
இனியன் தன்னையடைந் தார்க்கிடை மருதனே
—திருவிடைமருது-திருக்குறுந்தொகை 10.

திருநெய்த்தானம்-திருத்தாண்டகம் முற்றும் நோக்குக.

† i. அன்பலாற் பொருளுமில்லை ஐயனை யாறனர்க்கே
—திருவையாறு- திருநேரிசை 6.

ii. காயமே கோயிலாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலாய் நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவி காட்டி னேமே
—தனித்திருநேரிசை 4.

‡ பாறினய் பாவி நெஞ்சே பன்றிபோ லளற்றிற் பட்டுத்
தேறிநீ தெளிவை யாகில் சிவகதி திண்ண மாகும்
ஊறலே யுவர்ப்பு நாறி யுதிரமே யொழுகும் பாசங்
கூறையான் மூடக் கண்டு கோலமாக் கருதி னயே
—தனித்திருநேரிசை (7, 8, 9)

$ விரிவிலா வறிவினர்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினற் சொன்னரேனு மெம்பிராற் கேற்ற தாகும்
பரிவினற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னனை
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின்றேனே
—திருப்பெருவேளூர்-திருநேரிசை 9.

¶ வேந்தனெடு முடியுடைய வரக்கர் கோமான்
மெல்லியலா ளுமைவெருவ விரைந்திட்டோடிச்
சாந்தமென நீறணிந்தான் கையிலை வெற்பைத்
தடக்கைகளா லெடுத்திடலும் தாளா லூன்றி
ஏந்துதிரள் திண்டோளும் தலைகள் பத்தும்
இறுத்தவன்றன் னிசைகேட்டு விரக்கம் கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே
—திருப்பாசூர்-திருத்தாண்டகம் 10.

சிறப்புச் சிவபக்தருக்கேஉளதென அப்பர்கண்டார்*. அங்ஙனம் கண்டபின்னரே சமணமதத்தை விட்டு நீங்கினர் †. யாவருக்கும் உலகத்தில் வரும் பிணிகளைக் காட்டினும் சூலைநோய் கொடியதாயினும், அந்நோய் நீங்கித் தான் சீவித்திருக்கலாமென்னும் எண்ணத்தால் சமணமதத்தைக் கைவிட்டார் என்பது யுத்திக்கும் தேவார பாசுரச் சாட்சியங்களுக்கும்பொருந்தாது. சமணர்களுடைய நடவடிக்கைகளும், அவர் மதவொழுக்கங்களும் சற்றும் ‡ ஆமோதிக்கத் தக்கனவாய்க்காணப்படாமையாலும், அச்சமயத்தில் உயர்ந்த பதவி பெற்றுத் தருமசேனரென்னும் குருத்துவம்பெற்ற அப்பர், மன உறுதியாலே அம்மதம் விட்டாரன்றித் தேகத்திலுள்ள ஒருநோயின்காரணமாய்த் தான் சைவரானரென்பது ஆராய்ச்சிக்குப் பொருந்தாததும் அப்பர் குணத்தை நிஷ்காரணமாய்ப் பழிப்பதுமாகும். ஆயினும் அப்பர் சமணரைவிட்டு நீங்கிய காலத்தில் பிணியினல் துன்பப்பட்டா ரென்பது * உண்மையே. அப்பிணியால் சமணமதத்தைக் கைவிட்டாரென்பது காகதாலிய நியாயமாகும். † சமணரை விட்டும், பிணிவிடாது சிலகாலம் வருந்திய அப்பர் வேறொரு மருந்துமின்றிப் ‡ பரமனையே மருந்தாய்ப் பெற்றுச் சுகமடைந்தாரென்பது உண்மையே.

* 1. கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கட னீர்சுருங்கிப்
பன்னெடுங்காலம் மழைதான் மறக்கினும் பஞ்சமுண்டென்
றென்னெடும் சூளறு மஞ்சனெஞ் சேயிமை யாதமுக்கட்
பொன்னெடுங்குன்றமொன் றுண்டுகண் டீர்புகலிடத்தே
—தனித்திருவிருத்தம்-10

2.வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனை யாட்பட்ட வுத்தமர்க்கே
—தனித்திருவிருத்தம்-8.

3. பாவநாசத் திருக்குறுந்தொகைப் பாசுரங்கள்முற்றும் காண்க.

† குறியினின் றுண்டு கூறையில் லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்
அறிய லுற்றீரேற் கானூர் முளையவன்
செறிவு செய்திட் டிருப்பதென் சிந்தையே
—திருக்கானூர்-திருக்குறுந்தொகை. 4.

‡ எத்திக்கு மாய்நின்ற விறைவன் றன்னை
ஏகம்ப மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்த மயிர்பறிக்கும் சமணர் பொய்யில்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துளே யூறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே
—திருச்செங்காட்டங்குடித் திருத்தாண்டகம்.7,

* பிணிவிடா வாக்கை பெற்றேன்
பெற்றமொன் றேறுவானே
பணிவிடா விடும்பை யென்னும்
பாசனத் தழுந்துகின்றேன்
துணிவிலேன் தூய னல்லேன்
தாமலர்ப் பாதங் காண்பான்
அணியனய் அறிய மாட்டேன்
அதிகைவீ ரட்ட னரே.
—திருவதிகை வீரட்டானம்-திருநேரிசை 9.

† i பந்த பாச மறுத்தெனை யாட்கொண்ட
மைந்த னைம்மண வாளனை மாமலர்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எந்தை யீசனைக் கண்டினி தாயிற்றே (6)

ii மாசர் பாச மயக்கறு வித்தெனுள்
நேச மாகிய நித்தன் மணாளனை
பூசு நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
ஈசனேயென வின்பம தாயிற்றே. (8)
—கடுவாய்க்கரைத் திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை.

‡ i இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்த வந்தரும் அஞ்சேழுத் தோதினல்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே
—திருமாற்பேறு-திருக்குறுந்தொகை 4.

ii பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும்விநாயகனும் தோன்றக்கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.
—திருவாய்மூர்-திருத்தாண்டகம். (8)

பிளோதைனன்.

(PLOTINUS.)

The One remains, the many change and pass;
Heaven's light for ever shines; earth's shadows [fly;
Life, like a dome of many-coloured glass,
Stains the white radiance of Eternity.

வைராக்கியர்களும் (Stoics), லோகாயதர்களும் (Epicureans),பிளாதன்-அரிஸ்தோத்லன்கள் சிஷ்யர்களும் தம்வாசஸ்தானங்களி லிருந்துகொண்டு, பற்பல தேசங்களிலிருந்துவந்து கூடியவர்களுக்குத் தம் சித்தாந்தங்களை உபந்நியசித்து இருந்தனர். பின் கிரேக்கர்களின் ஆட்சி மடியவே, ஆங்கிருந்த கலைஞர்களெல்லோரும் புதிதாக எழும்பிய ரோம மாகாணத்திற்குட்பட்ட இடங்களில் குடியேறிப் பிரதானமாக ரோமா புரியிலும், அலெக்ஸாந்திரியா நகரிலும் தங்கிப் பல கலாநிலயங்களேற்படுத்தி, அவ்வவருடைய தத்வக்கொள்கைகளைப் பிரசங்கித்து வந்தனர்.

தேசங்களை வெல்லுவதிலும், மூர்க்கர்களையும் அநாகரிகர்களையும் அடக்கி உயர்த்துவதிலும், ராஜ்யாதிகாரம் செலுத்துவதிலும், அரசியல் முறைகளிலும் நீதி புரிவதிலும் மிக்க பிரபலமாக விளங்கினவர் அக்காலத்திய ரோமர்கள். ஆனல்,எழிற்கலைகள்,காவியங்கள் தத்வங்கள் முதலாயினவைகளில் தம் மனத்தினைச் செலுத்தாது, கிரேக்கர்களுடைய காவியங்களினின்றும்,தத்வ நூல்களினின்றும் தமக் கேற்றவைகளைத் தேர்ந்தெடுத்து மாற்றிப் பின்பற்றி வந்தனர். மூல-

தத்வ விஷயங்களை விடுத்துப் பழைய கிரேக்கர்களாய எபிகியூரன் ஜீனோன் முதலியவர்களின் முடிபுகளினின்று இவ்வுலக வாழ்க்கைக்கே அநுகூலமானவைகளைத் தெளிந்து கைப்பற்றி யொழுகினார்கள். லளித வித்தைகளிலும் தத்துவ ஆராய்ச்சியிலும்மதாசாரங்களிலும் சுயமாக நூதன சித்தாந்தங்கள் வெளிப்படுத்தியவர்களல்லர். இவர்களுடைய தத்துவமே கலப்புத்தத்துவம் (Eclecticism) எனவழங்கலாயிற்று.

நாள் செல்லச்செல்ல, அந்நியமதங்களும் கோட்பாடுகளும் மேற்சொல்லிய இரண்டிடங்களிலும் குடிப்புகுந்து பரவிவரவே, அப்போழ்து நிலவிநின்ற தத்வ வகுப்புக்களின்மீது அவநம்பிக்கையும் வெறுப்பும் உண்டாகிச் சுகபோகவாழ்க்கையைத் துறந்து, உயரிய தெய்விகத்தன்மைவாய்ந்த வாழ்க்கையைப் பற்றியொழுகவேண்டுமென்ற ஆர்வமும், முழுநம்பிக்கை அல்லது ஆழ்ந்த பக்தியினாலும், ஈச்வரன் கிருபாநோக்கத்தாலுமே பேரின்பம் பெறக்கூடுமே யல்லாது, வீண் தர்க்கமுறைகளால் இயலாதென்ற எண்ணமும் அரும்பிப் பூத்து வியாபித்தன. வெவ்வேறு கலைஞர் முன்தோன்றி, கிரேக்கர்களின் புராதனதத்துவங்களை, அச்சமயத்தில் பெருகிப் பரவிவந்த யூத - கிறிஸ்துவ மதக்கோட்பாடுகளுடன் ஒத்துப்பார்த்து, ஒன்றற்கொன்று ஆதாரமாகவும் பக்கபலமாகவும் தோன்றும்படி மாற்றிப் புதுக்கினர்; ஒன்றை மற்றவைகளின் மூலமாகத் திருத்தி விளக்கினர் இவைகளையெல்லாம் வேறொரு சமயத்தில் விஸ்தரிப்போம்.

இன்னோரன்ன காலத்தில், இத்தகையரிடையில், ஒப்புயர்வற்று விளங்கியவொரு ஞானக் களஞ்சியமாய் வாய்மை, தூய்மை, இனிமைகளின் பிறப்பிடமாய்த் திகழ்ந்த பிளோதைனன் என்றவரின் தத்துவ நுட்பங்களை மாத்திரம், அடியில் வருமாறு சுருக்கமாக அறிவிப்போம். இவருடைய கொள்கைகளிற் பெரும்பான்மையும் நம்முடைய உபநிஷத்துக்களின் சித்தாந்தங்களுடன் ஒத்திருப்பதை உணரலாம்.

எகிப்து (Egypt) தேசத்தில், லைகோபோலிஸ் (Lycopolis) என்ற இடத்தில், கி. பி. 204-ம் ஆண்டில் அவதரித்து, அம்மோனியஸ் ஸக்காஸ் என்ற மிக்க பெரிய ஞானியிடமிருந்து தத்துவோபதேசங்கள் பெற்று, 244-ம் வருடத்தில் ரோமாபுரிக்குச் சென்று இருபத்தைந்து வருடகாலம் ஞானோபதேசங்கள் செய்து, 50-ம் பிராயத்தில், ஞானம் அறம்ஆதியவிஷயங்களைப்பற்றிப் பற்பல நூல்கள் எழுதி, 270-ம் வருடத்தில் இவர் உயிர் துறந்தனர். அந்நூல்களை இவருடைய பிரதம சிஷ்யனான பார்பிரியன் (Porphyry) என்பவன் திரட்டி ஆறு புத்தகங்களாகப் பிரசுரித்தனன் (Enneads). இவருடைய சித்தாந்தங்களின் முக்கிய அமிசங்களாவன:—

இந்தப்பிரபஞ்சாதிகளெல்லாம் பரம்பொருளினின்று ததும்பி (Overflow), பிறகு நாலா பக்கங்களிலும் பரவியோடி, இறுதியில், அப்பரம்பொருளிலேயே ஒடுங்குவன. பாரமார்த்திகம் மிருகத்வம் ஜடத்வங்களாக முதலில் இழிந்து ஓடிப் பெருகிப் பரவிப் பின் புலனுணர்வு புத்தி தியானம் அறிதுயில் ஞானத்தினால், மீண்டும், அம்மூல வஸ்துவுள் லயிப்பனவாம். இவைகளை இனி விரிப்போம்.

சித்-அசித், அல்லது பாரமார்த்தம்-ஜடம், (அல்லது, புருஷன்-பிரகிருதி எனவும் ஒருவாறு கொள்ளலாம்,) என்பவையால் ஆக்கப்பட்டது இப்பிரபஞ்சம். யாவற்றையும் உற்பவித்து இயக்கித் தொழில் புரிவித்துக் கடைசியில் தன் அடியிற் சேர்ப்பிப்பது சித்-பாரமார்த்தம்-புருஷன் அல்லது கடவுள் என்பது; இயக்கி மாற்றப்பட்டு வருவது அசித், அல்லது ஜடம் என்பது. முன்னது நித்யத்வம்பொருந்தியது, அனந்தமானது, நிரந்தரமாயுள்ளது; பின்னதோ, எஞ்ஞான்றும் மாறி மறைந்து தோன்றித் தேயும் அநித்யப் பொருள். எனினும், அவ்விரண்டும் ஒன்றற்கொன்று எதிராக நின்று போர்புரிவனவல்ல; இறுதியில், அவ்விரண்டும் கூடி பிணங்கித் தன்னந்தனியாய்ச் சுத்த ஸ்வரூபமாய், ஏகமாய்ப் பிரகாசிப்பதாகும் கடவுள். ஏகம் என்பது எண்களின் சேர்க்கையைக் குறிப்பதன்று; கணிதசாஸ்திர வாயிலாக அறியப்படுவதன்று; ஆனால், எல்லையற்ற பலதிறப் பிரிவுகளுடையதாய், பல்வேறு பொருள்களாய், நானாவிதத் தோற்றங்களாய் விளங்கும் உலகாதிகளை இணக்கிநிற்கும் தனிப்பொருள் என்பதே மெய்ப்பொருளாகும். அப்பரவஸ்து, எண்களைப்போல், பற்பலப் பின்னங்களாக வகுக்கப் படக்கூடியதன்று; நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டது; அற்புதங்களுக்கெல்லாம் முதன்மையானது; அனைத்தையும்உண்டு பண்ணுவது; ஆனால், தான் ஒன்றாலும் உண்டுபண்ணப் படாதது; நேர்மைக்கும் எழிலிற்கும் எல்லாம் பிறப்பிடமாயினும், தான் அவற்றால் கட்டுப்படாததாய், தோற்றங்களுக்கெல்லாம் ஆதாரமாயினும், தான் எந்தரூபமுமற்றதாய், எல்லாச் சிந்தனைகளுக்கும் புத்திக்கும் ஊற்றாயினும், தான் மாத்திரம்அவைகளால்கவரப்படாததாய், அவைகளுக்கு அதீதமாய், சுருங்கக்கூறின், ஆதியாய்-நடுவாய்-முடிவாய், அகண்டமாய், நாமரூபங்களற்றதாய், கேவல அகோசர அகாத வஸ்துவாய் நிற்பதாம். யாவற்றையும் நாம் பார்ப்பதற்கு வேண்டிய ஒளியை யளிப்பதாகும்; ஆதலினாற்றான்; அப்பேரொளியை நாம் சுலபமாகப் பார்க்கமுடிவதில்லை. சிவம் சுந்தரம் ஞானம் என்பனவற்றை உடைத்தாயிருப்பதன்று; ஆனால், சிவமாய்ச் சுந்தரமாய் ஞானமாய் ஜ்வலிப்பதாகும். அப்பரம்பொருளை நாமரூபங்களுக் குட்படுத்துவோமானால், அதன்பெருமை சிறுகும். அகங்காரம் (Self Consciousness), அல்லது அக அறிவு நமக்கு இன்றியமையாத உபயோகமுற்றதானாலும், அப்பரம்பொருளுக்கு அது வேண்டியதில்லை. மறைந்து நிற்பதைத் தோற்றுவிக்க ஒளிவேண்டும்; ஆனால், ஒளியைப் புலப்படுத்த ஒளி வேண்டுமோ? சித் அசித் என்ற வித்தியாசங்களைக் கடந்ததாகும். அல்லாக்கால் அவைகளைக் கரைத்துச் சித்தசித்தாய், அல்லது சித்தசித்திற் கப்பாற்பட்டதாய்ப் பிரகாசிப்பதாகும். இச்சை உழைப்புக்களால் பீடிக்கப்பட்டதன்று; சகலத்திற்கும் அடிப்படையான அப்பரவஸ்து எதை இச்சிப்பது, எதற்காக உழைப்பதோ? ஆன்மாக்களைப்போல், சுதந்தரம் பெற்றுளதன்று, அசேதனப்பொருள்களைப்போல், கட்டுப்படுத்தப்பட்டதுமன்று. சுதந்தரம் பந்தம், உரிமை உடைமை விருப்பம் கர்மம், என்பனவாதிகளெல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலும் பூரிக்கப் பெற்றுள்ள புன்மாக்களையே பாதித்து வருத்துவன போலும். நிகரற்றுப்பிரகாசிக்கும் மூலவஸ்து அக்குணங்களால் தாக்கப்பட்டுத் தத்தளிக்குமோ? அம்மூலவஸ்துவின்மேல் நாம் சாற்றும் குணாதிசயங்களெல்லாம் அதின் உயர்

வைக் களங்கப் படுத்துவனவாம். ஆதலால், சர்வ குணக் களஞ்சியமாக எண்ணுதலும் இழுக்காகும். ஒரே குணத்தைப் பெரிதெனக் கொண்டு, அதை அம்மூலப் பொருள்மேல் போர்ப்போமாயின், பக்ஷபாதத்திற்குள்ளாவோம். சுருக்கத்தில், சர்வ குணமாய் நிர்குணமாய், ஒன்றாய்ப் பலவாய், எல்லாமாய்ச்சூன்யமாய் ஒளிப்பதாகும். உண்மையில், பரவஸ்து ஒன்று இருக்கிறது என்றுகூடச் சாதித்தல் அசங்கிதமாகும்; ஏனெனில், இருக்கிறது என்போமாயின், கால இடங்களுக்குள் அடங்கியதாகும்.

ஆதித்தனின்று ஒளியும், அனலினின்று வெப்பமும், பிரமாணத்தினின்று முடிபும் வெளியாதல்போல், அனந்தத்தினின்று இப்பிரபஞ்சம் தோன்றிப் பரிணமித்துளது. சர்வ நன்மை ததும்பப் பெற்றவர் கடவுள்; சர்வமும் நன்மை பெய்தி உய்யவேண்டுமென்ற நற்சிந்தனை, அல்லது விருப்பம் வாயப்பெற்ற நற்பிதா. ஆதலினாற்றான், இவ்வுலகாதிகளிலொவ்வொன்றும் அம்மூலப்பொருளை யடைய ஆர்வமுடைத்தாய் இயங்கிச் சுழன்று, உயர்ந்து தாழ்ந்து, திரிந்து கர்ம்மவலையிலகப்பட்டு உழன்று வருகின்றது. ஜீவகோடிகள் நிரந்தரமான அந்தப் பரவஸ்துவினின்று தோன்றிப் பெருகிக் கடைசியில், அனந்தமாகிய அவ்வஸ்துவிலேயே லயிப்பன. சீர் முறை ஒழுங்கு அல்லது இணக்கத்துடன் உலகாதிகளெல்லாம் சுற்றிச் சுழன்று வருதற்குக் காரணம் யாதெனில், எல்லாம் ஒரே வஸ்துவை நாடி ஓடுவதேயாம்.

அப் பரவஸ்துவுடன் ஐக்கியமாதற்குத் தூய எண்ணம் அல்லது விசாரிப்பும் (Thought), ஏகத்தியானமும் (Contemplation), சுயஞானம் அல்லது மதியூகமும் (Intuition) மிக்க பிரதான சாதனங்களாவன. எல்லாச் செயல்களின், எல்லாப் பிரயத்தனங்களின் எல்லா இயக்கங்களின் லக்ஷியம் யாதெனில், பரம்பொருளை உணர்ந்து அறிந்து தியானித்து, இறைவன் திருவடியின்பம் பெறுவதேயாம். ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வோர்விதத்தில் அப்பரமான்மாவையடைந்து, பேரானந்த முற்றிருக்க முபற்சித்து வருகின்றது போலும். புனிதவாழ்க்கை லௌகிகவாழ்வு, அறிதுயிலர் லோகாயதர், முதலான இருதிற வாழ்க்கையும் இருதிறத்தவரும் ஒரே முடிவை, அதாவது முக்தியை, அழிவில்லாத பேரின்பத்தையே நாடிப் பாடுபட்டு வருகிறார்கள். முன்னவர், உள்ளாராய்ச்சியால் தியானத்தால் துறவால், நேர்நெறியைப் பற்றி, அதிவிரையில், பரம்பொருளைச் சேர்கிறார்கள்; பின்னவரோ, காமக் குரோத லோப மோக மதமாச்சர்யங்களுட்பட்டுத் தியங்கிப் பற்பல பாதைகளைத் தொடர்ந்து, வெகுகாலத்திற்குப்பின், நல்லறிவு சுரக்கப்பெற்று உய்கின்றனர்.

பரம்பொருளினின்று முதன்முதலாக வெளியானது புத்தியாகும் (Intelligence). இதற்குப் பின் தோன்றியனவெல்லாம் படிப்படியாய்க் குறைந்து, சிறுகி நிற்பன. பாரமார்த்திக தெய்விகத்வத்தின் இழிவு, அல்லது வீழ்ச்சியே சிருஷ்டியாகும். பின், இவ்வறிவு அகஅறிவு புறவுலகு எனப் பிரிகின்றது. (Subject &Object); எனினும், இவ்விரண்டும் சம்பந்தித்துள. ஏகவஸ்து த்வைதப்பொருள்களாக ஏன் எவ்வாறு மாறிற்று என்பதைப்பற்றி உறுதியுடன் கூறுதற் கியலாது. பிரகாசப்பொருள் காந்தியை எங்கெங்கும் வீசிக்கொண்டே யிருத்தல்போல், சூரியனின்று கோடிக்கணக்கான கிரணங்கள் எப்பொழுதும் கிளம்பிப் பரவிக்கொண்டே யிருத்தல்போல், ஒரு பொழுதும் வடியாத முற்றும்நிறைந்த பாத்திரத்தினின்று நீர் வழிந்தோடிக்கொண்டே யிருத்தல்போல், பிரபஞ்சாதிகள் அம் மூலவஸ்துவினின்று இழிந்து பரிணமித்து வருவனஎனக்காட்டியுளார். (தொடரும்)

தமிழ்ப் பாடம் 57.

[நள வெண்பா]

கலிநீங்கு காண்டம்.

மனைவியை விட்டுப்பிரிந்த வருத்தத்தோடு கடற்கரையை அடைந்தநளன் தன்னைக்கண்டு பரிபவர் எவரேனும் இருப்பாரோ என்று ஏங்குவான்போல் திகைப்புற்று நாற்றிசையும் நோக்குவா னாயினான். அவனுக்கு முதலில் தென்பட்டது ஒரு கொக்கு. அதற்கு எதிரே சென்று வாய்பார்த்து நின்றான். அதுவோ, கிளையில் உட்கார்ந்துகொண்டு கம்பீரமாய் இவனைப் பார்த்ததேயொழிய ஒன்றும் பேசவில்லை. பிறகு வண்டுகளிடத்திலேனும் பரிவு காணலாமோவென்று பார்க்க, அவைகளோ தம்முடைய செய்கையால் இவனைப் பழித்து இடித்துரைப்பனபோல் தோன்றின. அதன்பின் கடற்கரையோரம் சென்றான். ஆளரவும் கேட்டவுடன் கதுமெனஓடிக் கடலில் குளித்துவிடுவது நண்டுகளுக்கு இயற்கை. அதன்படியே அங்கு மேய்ந்திருந்த நண்டுகள் விரைந்துபோய்க் கடலில் முழுகிவிட்டன. அதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு புகழேந்திப்புலவர் ஓர் அழகிய தற்குறிப்பேற்றவணியை அடுத்த செய்யுளில் அமைத்துப் பாடுகின்றார் :—

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
யொளிக்கின்ற தென்னோ வுரை. 20.

பதப்பிரிவு :—காதலியை கார் இருளில் கானகத்தே கைவிட்ட பாதகனை பார்க்க படாது என்றோ நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு அலவ ஓடி ஒளிக்கின்றது என்னோ உரை.

அன்வயம் :—அலவ, நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஓடி ஒளிக்கின்றது, காதலியைக் கார் இருளில் கானகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கப்படாது என்றோ, என்னோ, உரை.

பதவுரை.

அலவ - நண்டே,
நாதம் - சப்தத்தை
அளிக்கின்ற - தருகின்ற
ஆழிவாய் - கடலில்
ஓடி - (என்னைப் பார்த்தமாத்திரத்தில்)
ஓடிப்போய்

ஒளிக்கின்றது - ஒளிக்கின்ற இச்செய்கை,
காதலியை - மனைவியை
கார் - கரிய
இருளில் - இருட்டில்
கானகத்து - காட்டில்
கைவிட்ட - கைவிட்டுவந்த
பாதகனை - பாதகனாகிய என்னை
பார்க்கப்படாது - பார்ப்பது தகாது
என்றோ - என்று எண்ணியோ,
என்னோ - அல்லது வேறேதேனும்
காரணம் உளதோ
உரை - சொல்லுவாய்.

என்று நளன் கூறினன். (ஆங்கு-அசை).

விரிவுரை :—இது தற்குறிப்பேற்றவணி. தற்குறிப்பேற்றத்தில் உளபுல வேதுத்தற்குறிப்பேற்ற வணியாகும். இவ்வணியின் இலக்கணத்தை முன்விரிவாக எடுத்து எழுதியிருக்கின்றோம். அதனை மறவாமல் காக்கும்பொருட்டு இங்கு ஓர் முறை அதை ஓதி இச்செய்யுள் உளபுல வேதுத்தற்குறிப்பேற்ற வணி எவ்வாறு ஆகின்ற தென்பதையும் தேர்ந்து கொள்வது நல்ல பயிற்சி யாகும்.

நளனைக்கண்ட மாத்திரையில் கடலில்போய் விழுகின்ற நண்டிற்கு இரண்டுவித கருத்துக்கள் கற்பிக்கலாம். ஒன்று "இப்படிப்பட்ட பாதகனைப் பார்ப்பதை விடக் கடலில் விழுந்தாகிலும் மறைந்துகொள்வதே தக்கது" என்னுங் கருத்து. இதனைத்தான் புகழேந்தி ஏற்றுக்கொண்டார். மற்றது, "இத்தகைய பாதகனைப் பார்த்த பாவம் ஸமுத்திரஸ்நாநம் செய்தால்தான்போகும்" என்பது. ஓடி ஒளிக்கின்றது என்னோ?" என்று கூறுவதால் பின்சொன்ன கருத்தை நளன் கொள்ளவில்லை என்பது தெரிகின்றது.

குறிப்பு:—இருளில், என்பது ஏழாம்வேற்றுமை. இல் என்னும் ஏழனுருபு வந்திருக்கின்றது. கானகத்து, என்பதும் ஏழாம்வேற்றுமைதான். ஆனால் இல் என்ற உருபு இல்லை. அத்து என்னும் சாரியை மாத்திரம் பெற்று உருபுபெருமல் சொற்கள் வேற்றுமையடையக்கூடும் என்று முன் நாம் சொல்லியிருப்பதற்கு இது உதாரணம் ஆகும். கானகம் + அத்து- கானகத்து. அலவ, என்பது விளிப்பதால், எட்டாம் வேற்றுமை. முதல் வேற்றுமை, அலவன்.

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே-யா னுடைய[ணர்ந்தால்
மின்னிமைக்கும் பூணளவ் வீங்கிருள்வா யாங்கு
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு 21.

பதவுரை.

பானலே - நீலோற்பல மலரே, [கும்
சோலை - (உள்நாட்டுச்) சோலைகளிலிருந்து அடிக்
பசும் - இளமையான
தென்றல் - தென்றல் காற்றானது
வந்து - வந்து
உலவும் - உலவுகின்ற
கானலே - கடற்கரைச்சோலையே,
வேலை - கடற்கரையிலுள்ள
கழி - உப்பங்கழிகளில் வசிக்கும்
குருகே - நாரையே,
யான் உடைய - என்னுடைய நாயகியாகிய,
மின் - பிரகாசத்தை
இமைக்கும் - வீசுகின்ற
பூணள் - ஆபரணங்களையணிந்த தமயந்தி
ஆங்கு - அக்காட்டில்
அவ் - அந்த
வீங்கு - மிகுகின்ற
இருள்வாய் - இருட்டில்
உணர்ந்தால் - யான் கைவிட்டுப்போனதை
நித்திரை நீங்கி, அறிந்தவுடன்
என் - யாது
நினைக்கும்-என்னையும் நான் செய்த காரியத்தையும்
பற்றி யாது நினைப்பாளோ என்பதை
எனக்கு - எனக்கு
சொல்வீர்- சொல்லுங்கள். (என்றான் நளன்)

விரிவுரை:- கொக்கோ ஒன்றுங் கூறவில்லை. வண்டோ தன் பெடைக்குத் தாது ஊட்டி இவனை அஞ்ச வைத்தது நண்டோ கண்ட வளவில் ஓடிக் கரந்தது. எனவே, நளன் நீலோற்பலத்தையும் சோலையையும், நாரையையும் கூவி "நீவிரேனும் எனக்கு ஆறுதல் கூறிரோ" என்பவன்போல் "தமயந்தி என்ன நினைப்பாள். சொல்லுங்கள்" என வினவினன். அவைகளும் இச்சொற்களுக்குக் காதுகொடுத்து இவனைக் கண்ணெடுத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. "பக்ஷிக்கும் ஜந்துவிற்கும் பூவிற்கும் செடியிற்கும், இரக்கமென்பதில்லை. மேலும் மிகவும் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த இவை என்போன்ற வொரு வேந்தனது துயரத்தின் தரம் உணரத்தக்கன வல்ல. ஆகையால், எனக்கு இணையான இச் சமுத்திரராஜனிடத்தில் ஏதேனும் பரிவு எதிர்பார்க்கலாம்" என்று கடலை நோக்கினன். அங்கேயோ, தன் முறையே நம்பிரான் முறையுமா யிருந்தது. ஆகையால் கூறுவான்:—

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
யிரவகற்றி வந்தாய்கொ லின்று. 22.

பதப்பிரிவு:—போவாய் வருவாய் புரண்டு விழுந்து இரங்கி நாவாய் குழற நடுங்கு உறுவாய் தீவாய் அரவு அகற்றும் என்போல ஆர்கலியே மாதைஇரவு அகற்றி வந்தாய்கொல் இன்று.

பதவுரை.

ஆர்கலியே - கடலே,
தீவாய் - நெருப்பில் புகுந்து
அரவு - பாம்பை
அகற்றும் - நீக்கிக் காத்த
என்போல - என்னைப்போல (நீயும்),
போவாய் - போகின்றாய்;
வருவாய் - வருகின்றாய்,
புரண்டு - புரண்டு
விழுந்து - விழுந்து
இரங்கி - இரங்கி ஒலித்து - வருந்தி
நாவாய் - மரக்கலம் - வாயிலே நாக்கு
குழற - தடுமாற - புலம்ப
நடுங்குறுவாய் - அசைகின்றாய்-நடுங்குகின்றாய்,
(ஆதலால் நீயும்)
மாதை - உன் மனைவியை
இரவு - நேற்றையிரவு
அகற்றி - நீக்கிவிட்டு
இன்று - இன்றைக்கு
வந்தாய்கொல் - வந்திருக்கின்றாயோ!

விரிவுரை:—இதுவும் தற்குறிப்பேற்றம். கடலினிடத்திலேனும் தன் நெஞ்சிலுள்ளகுறையைக்கூறிக் கொள்ளலாம் என்று கருதிய நளனுக்கு அங்கு அதுவும் தன்னைப்போலவே தோன்றியது. தமயந்தியைப் பாழ்மண்டபத்தில் விட்டுப்பிரிந்து போனபோது, ஆயர் கொணர்ந்த அடுபாலில் தோயல் கடைவார்தம் கைபோன்று இவன் மனம் ஆனதால், இவன் 'போய் ஒரு கால் மீள்வதும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகுவதும்' ஆனான்; கடலும் போவதும் வருவதும் ஆயிற்று. நளன் துக்கந் தாங்கமாட்டாமல் விழுந்து புரண்டிருக்கவேண்டும். அப்படிச்செய்தான் என்று புகழேந்தி கூறவில்லையாயினும் இங்கு நளனே சொல்வதிலிருந்து அது தெரிகின்றது. கடலும் விழுந்து புரள்கின்றது. நளனும் இரங்குகின்றான், கடலும் இரங்குகின்றது. இரங்குதல் என்னும் சொல்லிற்கு வருந்துதல் என்றும்,ஒலித்தல் என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. அந்த இரண்டு அர்த்தமும் வைத்துச் சிலேடையாகக் கவி இவ்விடத்தில் அப்பதத்தை உபயோகப்படுத்தியிருக்கின்றார். நளன் வருந்துதலாகிய இரங்கலைச்செய்கின்றான். கடல் ஒலித்தலாகிய இரங்கலைச் செய்கின்றது. அவ்விதமே, நாவாய்என்பதற்கு இரண்டு அர்த்தம் கொடுத்து நளனையும் கடலையும் சம்மந்தப் படுத்துகின்றார் கவி. நாவாய், என்பதை நா வாய் என்று இரண்டு சொற்களாகக் கொண்டால், வாயிலே நாக்குக் குழறும்படி நளன் நடுங்கினன் என்று பொருள்படும். நாவாய், என்று ஒரே சொல்லாகக் கொண்டால் 'கப்பல்' என்பது அர்த்தம். அப்பொழுது, 'கப்பல்கள் குலுங்கும்படி கடல் அசைகின்றது', என்பது பொருள் ஆகும்.

"தீவாய் அரவு அகற்றும் என்போல" என்று நளன் தன்னைச் சொல்லிக்கொண்டதால் இந்த விதத்திலும் அவனுக்கும் கடலுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டோ என்றவொரு சந்தேகம் ஏற்படுகின்றது. நளன் தீயிலிருந்து பாம்பை அகற்றினன். கடலின் கீழ் வடவாமுகாக்கினியும், அவ்வக்கினிக்கு அடியில் ஆதிசேடன் என்னும் பாம்பும் இருக்கின்றபடியால் ஒருவிதத்தில் கடலும், தீயோடும் பாம்போடும் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

ஆதலால், தன்னைப்போலிருந்து தான் செய்வதை எல்லாம் செய்யவே, கடலும் தன்னைப்போலவே முன்னாள் இரவில் தன் மனைவியை விட்டுப் பிரிந்து வந்திருக்க வேண்டுமென நளன் அனுமானஞ் செய்து கொண்டு, "நாம் இருவரும் ஒரு நிலையிலிருக்க, உன் இடத்தில் என் வருத்தத்தைச் சொல்லிப் பயன் என்ன?" என்று நினைப்பவனாயினன்.

189040

வில்லி பாரத விளக்கம்

ஆதி பருவம்

குருகுலச் சருக்கம்.

வில்லி பாரதத்தின் முதலிரண்டு சருக்கங்களையும் ஓதுவார்க்குச் சரேலெனத் தோற்றுவ தொன்றுண்டு. அஃதியாதெனில், அது கதை செல்லும் வேகமே. குலமுறை கிளத்தலில் அவர் முக்கியமான நிகழ்ச்சிகளை மட்டும் தொட்டுக்காட்டி, வீண்வார்த்தைகளாலும், அவ்வவ்விடங்களுக்கு வேண்டாத வருணனைகளாலும் படிப்போர் மனதை வளையச் செய்யாமல், சுருங்கச்சொல்லு மழகுதெள்ளிதிற் றலங்கத் தன் கதையை விரைவிற் சொல்லிப்போகின்றார். அப்படி அவர் விரைந்துசென்றும், வடமொழிப் பாரதத்திலுள்ள பதினெட்டுப் பருவங்களில் ஐயிரண்டு பருவங்களைமட்டுமே செய்து முடித்தார். தான் எடுத்துக் கொண்ட வேலை அபாரமானதென்றும், குப்புறுங் கொள்கைத் தன்றென்றும் முன்னரே யூகித்தறிந்த வில்லி, அதற்கேற்பக் கதையைச் சுருக்கியும் அதன் கதியைப் பெருக்கியும், குறைந்தகாலத்தில் தன்னாற் கூடியவளவு விஷயங்களைத்தொடுத்துஞ் சருக்கங்களை முடித்தார். கதைசென்ற வேகத்தாலும், சந்தஅமைப்பிற் கருத்தைச் செலுத்தவேண்டிய காரணத்தாலும், வருணனைகளில் அதிகமாய் அவர் மனம் நாடவில்லை. சிலதூரம் கதையைச் சொல்லி முடித்தபிறகே இளைப்பாற நினைத்தார்போல், இந்திரப் பிரத்தச் சருக்கத்திலும், காண்டவதகனச் சருக்கத்திலும் சிற்சில வருணனைகளைச் சொல்லத் துணிந்தார்.

74 பக்கத் தொடர்ச்சி

இவர் இவ்வாறு கதையைச் சுருக்கிச்சொன்ன காரணத்தால், சிற்சில வேளைகளில் கதையில் வரும் பாத்திரங்களின் பெயர்களைக் கூருமலும், அடுத்துவரும் நிகழ்ச்சி முறையை விளக்காமல் வேறோர் நிகழ்ச்சிகளுக்குத் தாவியும் செல்லவேண்டியதாயிற்று. ஆகையால் கதையின் போக்கு நமக்கு முன்னரே தெரிந்திருந்தாலன்றி, ஆசிரியர் சொல்வது இன்னதெனக் கண்டறிவதும் சில சமயம் கடினமாயிருக்கிறது. அது குற்றமோ வெனின், அது குற்றமென்று சொல்லுதற்கு நான் இணங்கேன். அவர் மேற்கொண்ட பணியின் விரிவை நோக்கின் அது குற்றமென்று எவரும் சொல்லத் துணியார்.

பாரதக்கதை மிகவும் பழைமையான கதை. இது இராமாயணத்திற்கும் முற்பட்டதென்பது சரித்திர ஆராய்ச்சிக்காரர் துணிபு. பாரதத்தின் இடையிடையே இராமனைப்பற்றிய குறிப்புக்கள் நிகழ்ந்திருப்பின், அவையாவும் இடைச் செருகலெனவே தள்ளத்தக்கனவாம். அவ்வாறு அது இராமாயணத்திற்குமுந்தியதென உறுதியாய்ச் சொல்வதற்குக் காரணம் யாதெனில் ஐவர் ஆடவர் ஒருத்தியை மணம்புரிந்த செய்கைதான். ஒருவன் ஒரே மனைவியை மணக்கும் ஏகபத்னி விரதமும்ஒருத்தி ஒரேநாயகனை வரிப்பதும் பிற்காலத்தில்தோன்றியநாகரிகம். பண்டைக்காலத்தில் திபேத் என்னும் ஊரிலும், மலையாள நாட்டிலும், ஒருத்தி அநேகரை விழைதல் வழங்கமா யிருந்தது. அதன் பிறகு சிறிது நாகரிகம் ஏற்பட, உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம் ஒழிந்து, ஒரே குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை மட்டும் மணக்கும் வழக்கம் உண்டாயிற்று. இதற்கும் பிற்பட்ட காலத்திற்றான் மன்றல் ஒருவன் ஒருத்திக்கென மட்டுப்பட்டு நின்றது.

ஆதலால், அக்காலத்தில் இருந்த சமூக இயற்கையைப்பற்றிக் கூறும் ஓர் கதையில், தலைவன் தலைவியர் எதிர்ப்படலும், அவர் 'எய்தினெய்தியதாக' வமைதலும், விவரிக்கப்படல் இயற்கையே ஆகையால், அகப்பொருட்டுறையின் களவொழுக்கங்களும், குற்சிதமான விஷயங்களும் சொல்ல ஏதுவான இந்நூலில், வில்லி அவைகளை வளர்த்தாமலும், விநாயக புராணமுடையார்போல் விவரித்துரைக்காமலும் இருந்தது, அவர் சீரிய நடையுடையார் என்பதையும், அவர் நல்லுணர்ச்சியின் மேம்பாடடைந்திருந்தார் என்பதையும் விளக்குகின்றது. குருகுலச் சருக்கத்தின் தொடக்கத்தில்,

மண்டலம் பயிலுரகர் பேருயிர்ப்பினால் மயங்கி
மண்டலம் பொரவருந்திய பெருந்துயிர் மாற
மண்டலந் தனைநிழலெனு மரபினாற் றனது
மண்டலம் பொழியமிழ்தினன் மெய்குளிரவே
[வைத்தோன்

[வட்டமாகப் பயிலுகிற பாம்புகளின் பெரிய சுவாசத்தால் கலந்து, நெருங்கிய ஆலம் (விஷம்) ஆனது தாக்க, அதனாலுண்டான பெருந்துன்பம் நீங்க, உலகத்தைத் தன்னிழலெனுங் குளிர்ச்சியாலும், தன்னொடுதோன்றிய சந்திரனது அமிழ்தினாலும் குளிரவைத்தோன்]

என்னும் மடக்குச்செய்புள் கவியின்கல்வியை விளக்குகிறதேயொழியப் பொருட்பெருக்கினால் மகிழ்ச்சியை விளக்கவில்லை. இவ்வகையாக மடக்கு, பதுமம் இவை முதலான கவிகளைப் பாடுபட்டுப் புனைவது பேரறிவாளர் செய்கையன்றென்று ஓர் ஆங்கில ஆசிரியர் கூறுகிறார்.

குருகுலச் சருக்கத்தில் நமக்கு மகிழ்ச்சியையுண்டு பண்ணும் வண்ணம் அழகுபட அமைந்திருக்கும் செய்யுள்களைச்சந்தனுவும்,கங்கையும் ஒருவர்க்கொருவர் எதிர்ப்படுவதைக் கூறும் செய்யுள்களே. இவ்விடம் கவியில் நாடகத்திற் கேற்பனவான அநேக செய்கைகள் செவ்வனே பொருந்தியிருக்கின்றன. உண்மையில் வாசிப்போர்க்கு, அவர்களிருவர் நடிகர்களாய் அவர் முன்றோன்றி நடிப்பதுபோலும், அந்நடிப்பை அவர் கண்கூடாக் காண்பதுபோலும் தோன்றுகிறது. சொற்களினழகும், செய்யுள்களில் பொதிந்திருக்கும் பொருளும், நமது மனதை ஆர்வத்தால் பொங்குவிக்கின்றன.

ஒருகாலத்தில் கங்கையென் றுலகெலாம் கைதொழும் நங்கை, நான்முகன் பேரவையை நண்ணினாள். அவ்வமயம்,

இருங்கலை யிமையவ ரெதிரி றைஞ்சுவாண்
மருங்கலை மதியினை மதிக்கு மாறுபோ
லருங்கலை யயலுற வதிர்ந்து வீசினான்
பொருங்கலை யெனுமிகற் புரவி வீரனே

[அரிய கல்வியறிவினையுடைய இமையா நாட்டம்பெற்ற தேவர் முன்சென்று வணங்குகின்றவளுடைய இடையிலிருந்த அரியகலை (புடவை) நெகுழும்படி, அத்தேவருடைய அலைகின்ற அறிவு இவ் வளவினையுடையதென்று வரையறை செய்யுமாறுபோல, கலையென்னும் வலிய வாகனத்தையுடைய வீரனாகிய வாயு அதிர்ந்து வீசினான்]

அவள் கலைநெகிழும்படி பெரிய புயற்காற்று வீசிற்று. இச்செய்யுளில் மானம் காத்தலின் அவள்கலையருங்கலையென்றும், ஏதோ ஓர் சோதனை நிகழுமிடத்துத்தான், அறிவாளர் செய்கையின்றிறம் விளங்குமாதலால், மதியினை மதிக்குமாறுபோலென்றும்,கூறியுள்ளது போற்றத்தக்கது. இதிலும், இதற்கடுத்து வரும் செய்யுளிலும் யான் முன்னர்க் கூறியதுபோல் குற்சித விஷயங்களை இடக்கரடக்கலாகக் கூறியிருப்பதும் கொண்டாடத்தக்கது. இவ்வாறு நின்றமங்கையை அவ்வவைக்கண் ணுள்ளோர் காணக்கூசிக் கண் புதைத்தார்கள். ஆயினும், வருணன்மட்டும் அவ்வாறு செய்யாமல் அவளை உரிமையுடனோக்கினான். அதற்கேற்ப அவனை அவளும் நோக்கினாள். இதைக்கண்ட நான்முகன் அழன்று, அவனை மண்ணுலகிற் பிறக்கும் படிக்கும், சிலநாள் கங்கையை மணந்து இன்பம் துய்க்கும் படிக்கும் சபித்தார். இச்சாபத்தினால் இருவரும் மண்ணுலகிற் பிறந்தார்கள். கங்கை மட்டும் முற்பிறப்பின் நினைவோடு கூடியிருந்தாள். அவள் மண்ணுலக மிழியுங் காலையில் வசுக்களாகிய எண்மர், அவர்களுள் ஒருவன் மனைவி ஏவலால் வசிஷ்டனுடைய காமதேனுவை அபகரிக்க, மண்டுதீயென உருத்தெழுந்த வசிஷ்டர் அவர்களை மண்ணுலகிற் பிறக்கும்படி கடிந்தார். அவர்களும் வழியில் கங்கையைக் கண்டு தங்கள் செய்தியைச் சொல்ல, அவளும் அவர்களைப் பிள்ளைகளாய் அடையச் சம்மதித்தாள். வருணன் சந்தனுவாய்ப் பிறந்தான். அவன் ஓர்நாள் காட்டில் வேட்டையாடி நீர் வேட்கையால் கங்கையின் கரையை அடைந்தான். அங்கே கங்கையும், அவன் தனக்குரியவன் என்னும் உடைமை தோன்ற நல்லதோ ருருக்கொண்டு அவனுக்கு எதிர்ப்பட்டாள்.

கங்கையின் வெள்ளமேற் கருத்து மாறியிம்
மங்கைதன் பேரொளி வனப்பின் வெள்ளமே
தங்கிய சோகமுந் தாபமுங் கெடப்
பங்கய விழிகளாற் பருகினனரோ.

[நீர் நசையால் அலைந்து திரிந்த மன்னன், வேட்டைகாரணமாய்த் தனக்குண்டாயிருந்த தாகமும் இளைப்பும் அதிகமாயிருந்தும், இவளைக் கண்ணுற்றவளவில் அவையிரண்டுங்கெட, மங்கையின் பேரொளியாகிய அழகின் வெள்ளத்தையே தன்னிருதாமரைபோன்ற கண்களாலும் பருகினன்]

கங்கையின் நீர் வெள்ளத்தைவிட்டு அழகின் வெள்ளத்தைப்பருகினன். அவ்வெள்ளமே இவளாதலால்இவளையடைந்தவளவில், அவளுக்குரித்தான நீர்வெள்ளமும் இவன்தானேயடைவானாதலால் இவள் வனப்பின் வெள்ளத்தைப் பருகியது மிகவும் பொருத்தமுடையதா யமைந்திருக்கின்றது. நீர்வேட்கை சோகமும் தாபமும் உண்டாக்கும். ஆசைநோயும் சோகமும் அவள்பால் தாபமும் உண்டாக்கும். ஆதலால், அக்காதல் நோயை அடைந்த அரசன் அவையிரண்டும் நீங்கப்பெற்றது மிகவும் இறும்பூதைத்தருகின்றதன்றோ? ஆயினும் அது உண்மையே. இவ்வாறு முரண்விளைந்தழிய வெகு நன்றாய்ச் சமைத்த இச்செய்யுளும் இதற்கடுத்த இரண்டு செய்யுள்களும் அகப்பொருட்டுறையில் காட்சி, ஐயம், துணிவு என்கின்ற மூன்றையும் விளங்கவைக்கின்றன. காதல் நோய்க் 'காலுறு கண் வழிப் புகுந்ததென்று' கம்பர் கூறியிருப்பினும், விழியின் வழி உள்நுழைந்து மெய்யெலாம் பரவுதலேஇயற்கை. ஆணியொன்றை, மற்றோர் ஆணியையெதிர் செலக் கடாவி ஒழித்தல்போல், ஓர்வகைச் சோகத்தையும் தாபத்தையும். மற்றொருவகைச் சோபமும் தாபமும் கெடுத்தன.

கவிதா லோகம்.

கவிதாலோக மென்றவுடன் இஃதென்ன புதுப் பெயரென்று வாசகர்க்குத் தோன்றுத லியற்கையே. உற்று நோக்குமிடத்து அஃது உண்மையென்றும் பழைமையென்றும் நன்கறியலாகும். இக்கவிதாலோகம் மும்மைசா லுலகங்களைப்போல எண்ணிக்கையுடையதன்று. ஓர் குறிப்பிட்ட இடமும் இதற்கில்லை. மற்றவுலகங்களைப்போலப் பரப்பு நீளம் முதலியன இவ்வளவென்ற அளவை நியதி இக்கவிதாலோகத்திற்கில்லை. ஆதலால் இன்னவிடத்தில் இதற்கப்பாலுள்ளதென்ற எல்லையும் இதற்குக் கூறவேண்டியதாயிற்று. இவ்வுலகத்திற்குப் போகுந்திறமை கற்றவர்க்குத் தடையின்றிச் செல்லுதலும் மற்றோர்க்கு இயலாதிருத்தலும் இயற்கையிலேயே அமைந்திருத்தலால் இவ்வுலகிற்குக் கட்டுக்காவல் முதலியன வில.

நன்கு கற்றோரனைவரும் தடையின்றி இவ்வுலகிற் சென்று ஆங்கு இடந்தொறு மிடந்தொறும் திகழும் அற்புதங்களையும் மற்றும் அழகுகளையுங் கண்டு இன்புறலாம். மற்றோர் அவைகளைக் கற்றோர் வாய்மொழியிற் கேட்டு அறிந்துகொள்ளக் கூடும். எம்மதத்தோரும் எம்மொழி பயின்றோரும் அவ்வம் மொழியின் வாயிலாகவே இவ்வுலகிற்குச் சாதாரணமாகச் செல்வர். இவ்வுலகம் போவதற்கு விமானம் வண்டி முதலியன தேடவேண்டா. இவைகளிலேறிச் செல்வோமென்பார்க்கு வழியுமில்லை.

இப்பெருமைவாய்ந்த கவிதாலோகத்தில் காவியலோகம் உள்ளடங்கியது. கவிதாலோகத்திற்சென்று ஆங்காங்குள்ள அமைப்புக்களையும் அற்புத அழகுகளையும் நுட்பங்களையும் மற்றும் கண்டு மனதாரத் துய்க்கவேண்டு மென்னுங் கருத்துடையவர் காவியலோகத்தில் மிகுந்த ஆர்வத்தோடு பழகுதல்வேண்டும்;இன்றேல் பயனின்றும். ஆதலால் கவிதாலோகத்திற்குச் செல்வதற்குக் காவியலோகமே சிறந்த வழியாகும். அதனினுஞ் சிறந்தது வேறில்லை யென்னலாம். அதுபோலவே இக்காவியலோகமும் மனோலோகத்தி லடங்கியதாதலால் கவிதாலோகத்திற்கும் மனமே பிரதானமாகும்.

சுவரின்றேல் சித்திரமெங்ஙனமெழுதுவது; அதுபோல மனமின்றேல் கவிதையுமில்லை, மனமுடையார்க்கே கவிதையுமுண்டு. "மனமென்பது எல்லாச்சீவராசிகட்கும் பொதுவாக வமைந்தவோ ரியல்பன்றோ! ஆதலால் மனமுடைய ஜீவராசிகளனைத்திற்கும் கவிதாலோகஞ் செல்லும் வலிமையுண்டோ? என்னும் வினாவெழுவது நீதியாகும். இங்குக் குறிப்பிடும் மனமென்பது அதன் தொழிலாகிய அறிவைக் குறிப்பிடுகின்றதென்பதை நன்கு நினைவிற்கு வைக்கவேண்டுவது முதற்கடமை. ஆன்றோர் இவ்வறிவை ஓரறிவு முதலாக ஆறறி வீறாகக்கொண்டு முறையே புல்முதல் மனிதர்வரை வகைபிரித்துக் கூறியுள்ளார். மனிதரினும் 'மாக்கள், மக்கள்' என்று இரண்டுவகை குறிப்பிடுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

மாவும் மாக்களும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறி வுயிரே

மாக்களென்ற மனித வகுப்பினரை ஐயறிவுடையவிலங்குகளோடு சேர்ப்பதும், பகுத்தறிவென்ற ஆறறிவுடைய மனித வகுப்பினரை மக்களென்று பிரிப்பதும் அவர் கொள்கையாகும். கவிதாலோகத்திற்குச்செல்வாரது மனத்தொழில் ஆறறிவுடையதாயிருத்தல்வேண்டும். பகுத்தறி வுடையார்க்கே கவிதாலோகஞ்செல்ல வன்மையுண்டாதலால் அவர்க்கே யங்குப் போக வேண்டுமென்னுங் கருத்துண்டாகுமேயன்றிப் பிறர்க்கு அக்கருத் தெழாதிருப்பது வியப்பன்று.

பல நூற்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தும், நுண்ணறிவுடையோர் ஆய்ந்து தெளிந்துகூறும் பொருளுரைகளைக் கேட்டும் விரிந்த அறிவுடைய மனத்தவரே கவிதாலோகத்திற் குரியவராகும். கவிதையை ஒருலகமாகக் கூறலாகுமா, வென்று கேட்கலாம். சுவையூறும் பாடல்களைப் படித்துக்களித்து அதிலேமுழுகியிருக்கும் ஒருவனை என்னதான்விளித்தாலும் அக்கூச்சல் அவன் செவியிலேறுமோ? ஏறாது. மறுபடியும் அவனருகில் வந்து தட்டிக்கூவி 'நண்ப! யான் கூவியழைத்தேனே' யென்றால், 'யான் கேட்கவில்லையே' என்கின்றான். அதற்குக் காரணம் யாது? அப்பொழுது அவன் மனது கவிதையில் ஆழ்ந்து மூழ்கியிருந்ததே யாகும். அதனாலேயே அவனுக்குக் கேட்கவில்லை. துயிலும்போது ஒருவன் கனவிலே அநேக அற்புத வுலகங்களுக்குச்சென்று கண்டு ஆங்குத்தானும் பல அதிசயச்செயல்களையுஞ் செய்ததாக நினைக்கின்றான். விழித்தவுடன் ஒன்றுமில்லை. முன்னியல்புதான். கனவிலின்றி நனவிலே ஒரு கவியாசிரியன் அத்தகு காரியங்களைச் செய்ததுமன்றித் தன்னைப்போலொத்த பிறரையும் தன்மய மாக்குகின்றான். இவ்வாறு மனத்தோற்றத்தா லறிந்து அனுபவிக்குமின்பவுலகிற்கே ஈண்டுக் கவிதாலோகமென்று புனைபெயர் கொடுக்கப்பட்டது.

செய்யுட்களைக் கற்றுத்தெளிவதனாலேற்படும் இன்பத்தைப்போல, விரிந்த மனதுடையோர்க்கு வசனத்தைப் படிப்பதி லேற்படுவதில்லை. முதலில் மனிதர்க்கு மனவுணர்ச்சியிலிருந்தே ஏனைய வறிவுகள் தோன்றின ஆதலால் ஏனைய வறிவுகளினாற் கிடைக்கும் இன்பமும் மனவின்பத்திற் கிணையாகமாட்டா. இனிய பல சுவையுடைய உண்டிகள் ஆக்கிவைத்திருந்தபோதிலும் ஒருவனுக்கு மனம் செம்மையின்றேல் அவை அவனுக்கு இனிமை பயவா. மனஞ் செம்மையாயவழி இவை குறையாயினும் இனிமையாம். கவிதையோவெனில் கூறியவொன்றுமில்லாமலே இவைகளைவிட மேன்மையான இனிமையைக் கொடுக்கும். சான்றாக;

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியு மிகக்கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொரு தீம்பருப் பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ் சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடு தெள்ளமுதே

என்ற பாடலை அநுபவித்துப் பயன்முறை படித்தால் இத்தகைய மதுரமான பதார்த்தங்களை ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிட்ட சுவையைவிட மிகுந்த சுவை பெறுகின்றதன்றோ? முற்குறிப் பிட்டனவைகள் நாவிற்குமட்டுமே சுவையைக் கொடுக்கின்றன; பாடற்சுவை நாவோடு மனதையுஞ் சுவைபெறச் செய்வதன்றிக் களிப்பெனுங் கடலிற் கொண்டுபோய் விடுகின்றது.

ஓவியம் சிற்பம் சங்கீதம் முதலியன மனிதர்க்குக் களிப்பைக் கொடுக்கும் கலைகளாகும். அவைகளும் மனிதரைத் தேவகதியாக்கும் மனப்பொலிவு பெற்ற பிறகுதான் தோன்றின. மனப்பொலிவு சிறிது குன்றியவர்க்கும் அவைகள் மிகுந்த களிப்பைக் கொடுக்கும். இக்கலைகளால் கவிதாலோகத்திலுலாவுவார் அத்தகைய களிப்பை யடையார். இதுபற்றியே கல்வியிற் பெரியாராகிய கம்பர்,

"பொன்னிற்சோதி போதினில் நாற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனில் தீஞ்சுவை செஞ்சொற்கவியின்பம்."

என்று கூறியிருக்கின்றனர்.

ஓவியமும் சிற்பமும் காட்சியாலும், இசை காதினாலும், சுவை நாவினாலும் இன்புறுத்தி மனதைக்களி பெறச் செய்கின்றன. கவிதை இவைகளின்றித் தனியே அவைகளைவிட மிகுந்த களிப்பைக் கொடுக்கின்றது. ஓவியக்காரன் ஒருருவத்தை நேரிற்கண்டோ அல்லது கேட்ட நினைவை வைத்து அப்பொருள் இவ்வாறிருக்குமெனமனத்தால்அனுமானித்தோதான் படமெழுத வேண்டும். அவன் படமெழுதுவதற்கு முன்னால் அவ்வுருவம் அவன்மனதிற் பதிந்துவிடுகின்றது. கவிதையில் உணர்ச்சியால் அவ்வருணங்களின்றியே அப்பொருள் ஓவியத்தைவிட மனதில் தோற்றுகின்றது. உதாரணமாக, நம்மாழ்வார் திருமாலின் திருவுருவம் புலப்படக்கூறும் பதிகங்களொன்றில்,

மின்னு நூலும் குண்டலமும்
மார்பில் திருமறுவும்
மன்னு பூணும் நான்கு தோளும்
வந்தெங்கும் நின்றிடுமே
வென்றி வில்லுந்தண்டும் வாளும்
சக்கரமுஞ் சங்கமும்
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா
பூந்தண் மாலைத் தண்டுழாயும்
பொன் முடியும் வடிவும்
பாங்கு தோன்றும் பட்டும் நாணும்
கோலா நீள் கொடிமூக்கும்
தாமரைக் கண்ணுங் கனிவாயும்
நீலமேனியும் நான்கு தோளும்
என்னெஞ்சம் நிறைந்தனவே
நிறைந்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த
நீண்ட பொன்மே னியொடும்
நிறைந்தென்னுள்ளே நின்றெழிந்தான்
நேமியங்கை யுளதே

என்று கூறுகின்றார். இப்பாடல்போன்ற பொருள்களை வைத்துத்தான் ஓவியர் படமெழுதுகின்றனர். கவிதாலோக முடையார்க்குத் திருமால் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்வதைவிட இப்பாடல்களிலிருந்து திருமாலுருவம் நன்றாக அவர் மனதிற்குப் புலப்படுமென்பது மிகையாகாது. இதுவும் உருவத்தில் எழுதிவிடக் கூடலாகாதாவென்று கூறலாகும்.

"வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தானை
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்"

என்ற இப்பாடலிற் கூறிய உருவத்தை எவ்வாறு எழுதிக் காட்டமுடியும். ஒருவேளை நகையிழந்த முகத்தை எழுதிக்கொண்டாலும் கல்லும் கனிகின்ற துயரத்தை நேரிற் காண்பதைத்தவிர எழுதவியலாதென்பது திண்ணம். கவியறிவுடையார்க்கு இச்செய்யுளைப் படித்தவுடனே இப்படம் அவர் மனதிற் பதிந்து விடுகின்றது.

கண்ணாற்கண்ட பிறகு தன் வேலைப்பாடுகளைச் சிந்தித்தறிந்து கொள்ளத்தகுவது சிற்பத்தொழில். கம்பர் அயோத்திமாநகரத்தின் அமைப்பையும் வேலைப்பாட்டையும் கவிதாலோக வாயிலாகப் படிப்போர்க் கறிவிக்குமிடத்தில் அடியில் வருமாறு சுருக்கிக் கூறுகின்றார்.

அயின் முகக்குலிசத்து அமரர்கோன் நகரும்
அளகையு மென்றிவை யயனார்
பயிலுற வுற்றபடி பெரும்பாலும்
இப்பெரு திருநகர் படைப்பான்
மயன்முதல் தெய்வத்தச்சரும் தத்தம்
மனத்தொழில் நாணினர் மறந்தார்
புயல்தொடு குடுமி நெடுநிலை மாடத்
திந்நகர் புகலு மாறெவனோ

என்று கூறியிருக்கின்றார். அதாவது, 'பிரமதேவன் இந்நகரத்தைப் படைப்பதற்காகக் கைபழகவேண்டியே அமராவதியையும் அளகாபுரியையும் படைத்தான். இந்நகரத்தின் வேலைப்பாடு முதலிய நுட்பங்களையும் மற்றுங் கண்டு மனத்தொழிலில் மேம்பட்ட மயன் விசுவகருமன் முதலியோர் தத்தம் மனவறிவு குறைவுபாடுடையதென்று வெள்கித் தம் வேலையு மறந்தனர்' என்பதாகும். இதனால் அந்நகரத்தின் வனப்பைச் சிறிது சிந்தித்துணர்ந்தால் நன்கறியலாகும்.

இதுபோலவே இசையினாலும், மனவுணர்வினாலும் உணர்ச்சியிற் சிறந்தோர், காதாற் கேட்டதைவிட மேலான இன்பமடைவர்.

வள்ளுகிர் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவல் தோன்ற விருந்தென மகளிரீந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிதுசென்றார்

இப்பாடலில் "பெண்பாலார் வீணையிற் சுருதி கூட்டித் தம் கண்ணினாற் பார்த்தும் கையால் வாசித்தும் அதற்கிசைய வெண்மையான புன்முறுவலோடு பாடிக்கொண்டிருக்கின்ற தேன்போன்ற பாடலைக் கேட்டனர்" என்று கூறப்பட்டுள்ளது. இதனால் அவர்களது உருவமும் பாடுந்தன்மையும் பாட்டினியல்பும் மற்றும் நன்கு புலனாகின்றன. இந்நுட்பவொலியாகிய சங்கீதத்துடனும் பேரொலிகளைக் குறிப்பிடும் பாடலையும் எடுத்துக்காட்டிக் கட்டுரையை நிறுத்துவோம்.

எறுவாரொலி எற்று மினேவெனக்
கூறுவாரொலி தோடுகுலைந்து வீழ்ந்
தாறினார்ப்பொலி அஞ்சிலம்பின் னொலி
மாறு கொண்டதோர் மாக்கடலொத்தவே

என்ற நகரமாந்தரின் ஒலியும்;

ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்தன வானோர்
ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண்டு
ஆர்த்தன வண்டினம் ஆர்த்தன வேலை

என்ற மங்கள ஒலிப்பாடலையும் வாசிக்கும் பொழுதே அவ்வோசைகள் ஒன்று சேர்ந்து நம்முளத்தில் செவிவழியாக வந்து நிறைந்து விடுகின்றனவன்றோ? இங்குக்கூறிய அனைத்தும் மற்றும் இவைபோன்றன பிறவும் கவியின் வாயிலாக மனத்தன்மையினாலறிந்து கொள்ளலாகும். முக்கியமாக உயர்ந்து தேர்ந்து தெளிந்து கவிபாடுந் தன்மைவாய்ந்தவரின் பாடல்களால் மட்டுமே அறிஞர்க்கு இத்தகைய மனவுணர்வு ஏற்பட்டுப் புலன்வழியின்றியே விஷயங்களையறிந்துகொள்ள லாகுமன்றி மற்றன்று. முன்னாற் செய்யுட் பழக்க மிகுதியுடைய தமிழ்நாட்டில், அங்ஙனஞ் செய்யுளியற்றுந் தன்மையுடையோர் தற்காலத்தில் மிகச்சிலரே யாவர். அவரிலும் பலர் தாமியற்றிய அரிய செய்யுட்டொகுதிகளையும் தனிப்பாக்களையும் பகிரங்கபடுத்தாமல் புதைபொருள் போல வைத்திருக்கின்றனர். வெளியிடு மெண்ணமுடையார் போதிய துணையாற்றலின்றி வாளாவிருக்கின்றனர். மனித முன்னேற்றத்திற்கு வரும் எல்லாப் பத்திரிகைகளும் சுவையுடைய பாடல்களுக்கென்று ஓர் சிறுபகுதி இடங்கொடுத்துப் பாடல்களை வருவித்துப் பிரசுரித்தால் படிப்போர்க்குச் செய்யுட் பழக்கத்தால் மனவுணர்ச்சி மிகுதியுண்டாகும். இக்கட்டுரையின் கருத்து யாதெனின், புலனுணர் விருந்து மனவுணர்வு குறைவாயிருந்தால் மிகுபயனடைய வியலாது; மனவுணர்ச்சி மிகுதியாகவிருந்து புலனுணர்வு சிறிது குறைவாயினும் நிறைபயனையடையவியலும்; இவ்விரண்டும் ஒருங்கே யமைந்தால் பொன்மலர் நாற்றம் பெற்றதுபோலும், சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பெய்தது போலும் சிறப்புடைத்தாம்.

ஏமாங்கதத் திளவரசன்.

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

1. கண்ணிற் கொரு மண்.

பொன்னோடு மணியும் பட்டொடு பொன்னும் புனைந்து பன்னிறமின்னல் பாங்கெலாம் பாய்ந்து பொலிந்த ஆத்தான மண்டபத்தின்கண், அரசரும் அமைச்சரும் அந்தணாளரும் அமர்ந்து சூழவும், மாகதர் திரண்டு பாடவும்,வாணவர் வாழ்த்தவும்,வான்விட்டிறங்கிய வனிதையர் இவரென நாடகக் கணிகைமார் சதங்கை யொலிக்கச் சீறடி பெயர்த்துச் சதிமிதிக்கவும், அரிமாநான்கு ஏந்தியதோர் ஆதனத்தின் மீது, கவரி உயிர்த்த குழவிக்காற்றுத் தவழத்தவழ, விண்மதிபோன்ற தண்குடை நிலவில் கொலுவீற்றிருந்த கடாரமன்னவன் முன்னர், வாயிற்காப்பாளர் இருவர்போந்து, "பெரும, நின்னைக் காணிய புலவனொருவன் முகில்தோய் முரசதிர் வாயில்தலை வந்துளன், உட்புகப் பணித்தியோ?" எனத்தாழ்ந்து சொல்லினர். வேந்தனு மதுகேட்டுக், "காவலோய், நன்று நின்செயல். பொலிதர எம்மவை புலவர் மேவுதற்கு நாம் பணித்தலும் வேண்டுமோ! தாழாமல் அன்னவனை இவ்வயின் கொணர்திர்," எனக் கடிந்தனன். வாயிற் காவலாளரோ, 'நீ சொல்,' 'நீ தான் சொல்' என்பவர்போல் எதிரெதிர் நோக்கினர். இன்னும் அவர் அகலாதிருந்தமை கண்டு அரசன், "எம்மொழிக்கு ஒரு பொருளிலதோ!" வென உரப்பினன். அவன் புகல்வனென இவனும் இவன் புகல்வனென அவனும் இருவரும் வெருவிப் பேசாதிருக்கப் பக்கத்தமர்ந்த மந்திரி அவ்வேவலாளர் முகக்குறி கருதித் "தலைவ, இவ்வாட்கள் ஏதோ இயம்புதற் கஞ்சிக் கலங்குகின்றனர். வெருட்டாமற் கேட்பாயேல் செப்புவர்" என்று தெரிந்து கூறினான். இன்னதினுண்மையை வேந்தனும் உணர்ந்து, "அரசற்குச் சேவகம் புரிபவர் அச்சமும் ஆசையுமின்றியே தம் கடமையை ஆற்றலன்றோ முறை. உள்ளது ஒளியாது உரைத்திடுமின்," என்று நகைகலந்த முகத்துடன் வினவ, ஒருவன், "ஐய, கவி யென்பான் இனியன கூறிலன்" என முன்னம்மற்றையவன்,"அந்தணனென்பான் தண்ணளி காட்டிலன்" எனச் சேர்த்தனன்.

"சுருங்கச் சொன்னீர். நமக்கு இத்திறம் தந்தவன் வெளி நிற்கும் அக்கவியே யாதல்வேண்டும். அன்னவனைக் காணாது அமையேன்.சென்று அவனை எம்பால் செலுத்துவீர்."

"அரசே, நின் அடையாத வாயிலகம் தேடிவரும் விருந்தினர் தன்மையைத் தாம்பார்க்கும் திறமேனும் தொழிலேனும் அடியேற்கு இல்லை. எனினும் இப்புலவன் நலம் கருதி இங்குப் போந்துளன் என்ன எண்ணிலேன். அடிமை எம்முரை எள்ளற்க,அப்புலவனைப் போகப் பணித்தி," எனக் கடைக்காப்போர் அரசனைத் தொழுதனர்.

முறுவல் தோன்ற வேந்தன் அமைச்சனை நோக்கி, "இனி, நீ,குணபாலா, எம்மவையின்கண் மிகை. நன்மையும் தீமையும் நாடிச்சொல்ல இவ்வாட்கள் எமக்கிருக்க அமைச்சரேன்" என்னுமளவில் குணபாலன், "மன்னவா, எப்பொருள் யாவர் வாய் வரினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதன்றோ அறிவு. ஆராய்ச்சி முறையில் யாம் காண்பன சில இச்சேவகர் போன்றவர் இயற்கையாய் உணர்தலும் கூடும். ஆதலால் இவர் அடைந்துள அச்சமும் சிந்தித்தற் கொத்தது.கவியவனை இன்றுபோய் நாளைவரச்சொல்வோம்." என்று மறுமொழி பகர்ந்தனன்.

'ஐய, குணபாலா, அழகு அழகு நின்னுரை அழகு! இன்றுபோ நாளைவா என்பது கடன் காரர்க்குக் காட்டும் ஓர் கூற்றேயன்றோ! கடார நாட்டுக் குடிகளும் இக்கட்டுரை கற்றிலரே! எம் நாவில்இவ்விழிவுரை வருதலும் வேண்டுமோ! வேறு என், இந்தக் கவிஞனை யான்........" என்றெடுத்த வாக்கியத்தை அரசன் முடிப்பதற்குள் தர்க்கத்திற்குக் காரணமான அவனே வந்து இவர் எதிர் நின்றான். உருவத்தினாலேனும் முகச் சாடையினாலேனும் நடையுடை பாவனைகளினாலேனும் கவிவாணன் என்று அவனை யெவரும் மதியார். கவிகளுக்குரிய அகத்தினழகு முகத்திற் காணவில்லை. யாக்கையின் செழிப்பையும் ஆடையின் சிறப்பையும் நோக்குங்கால் நல்குரவு என்னும் நீங்கா நிழலுடன் எந்நாளும் தோழமை பூண்டிரான். திரண்டதோளும் தசை திணிந்தகையும் குந்தமும் கொடுமரமும் சுமத்தற் குரியனவேயன்றி ஏட்டுச்சுவடியையும் எழுத்தாணியையும் ஒன்றாக மதியா. அந்தணனும் ஆகான் திண்ணம். அறைகூவி அமர்க்கழைத்தலல்லாது மறைகூறி

யழைக்கும் தோற்றமோ இவன்வயின் திணையள ாண்கிலம். ஆயவன் புகுந்தபோது அச்சபையு ் எய்தியதோர்வியப்புத் தெளிவதன்முன் அவன் அரசனைப் பார்த்து, "ஐய, புவனேச்வரன் என்னும் மன்னவனும் நீயோ! இவ்வளநாடும் நினதோ? நின்னவையின்கண் நண்ணிய எனக்கு நீ முகங்கொடாது முகமன்கூறாது ஆதனமும் அளித்தலின்றிச் சோர்ந்ததென்ன காரணமோ! விருந்தினரை வரவேற்கும் முறை யாதும் பயின்றதில்லை போலும்!" என இருந்தவர்நாணத் தெழித்துரைத்தனன்.

"அவைமுறை யறியாது, அழைப்பதன்முன் முடுகிப்புக்க நினக்குத் தருவதற்கு ஏற்ற முகமும் முகமனும் எது வெனத் தேடுகின்றேன்," என்றனன் புவனேச்வரன்.

"நின் நாவையும் முகத்தையும் நான் இருப்பதற்கோர் இடத்தையும் நீ தேடித் தருவதன்முன் இது இயம்புதி. இவ்வளநாடும் நினதோ? புவனேச்வரமன்னனும் நீயேயோ?" என மீண்டும் கேட்டனன் அப்புதியவன். காவலாளரில் ஒருவன் இச்சொல்லிற்கு வெகுண்டு, "கண்கெட்டாய்? மதிகெட்டாய்? பயனிலா இவ்வினை எதற்காகப் பாராட்டுகின்றாய்! அரசனைக்காண்கிலாயோ? வளநாடு மற்று எவருடைமை என்று மதிக்கின்றாய்," எனவெகுள, வேந்தன் அவனைக் கையமர்த்தியப் புதியவனைப் பார்த்துப் போலிப்பணிவுடன், "அஃது ஐய, இன்னும் இவன் எம் அமைச்சர்பிரான் குணபாலன், இவன் எம் சதுரங்கத்தலைவன். அவர் எம் குலகுரு பலதேவர், மற்றையவர் எம் ஆத்தானகவி முத்தமிழ் ஆலவாய் ஐயனார்," என்று காட்டிவருகையில், புதியோன் அவனைத்தடுத்து, "நில் நில், நின்னவை வைகியோர் யாவரெனத்தெரிந்துபோக யான் இங்கு வந்ததில்லை. உன் குணசூரனும் சரபாலனும் கிடக்க, யான் தங்குதற்கு ஓர் ஆதனம் இம் மண்டபத்தில் இலதோ? எனக்கடாவினன். "உளது" என அரசனும் பீடமொன்றைக் குறித்துக் கையமர்த்த, இவ்வதிசயத் தோற்றமும் இடிநிகர் மொழியும் உடையவன் அமர்ந்ததும், "ஐயா, நீ யார்? நின்பதி யாது, பெயர்யாது? இங்கு வந்ததென்? காரண மின்றியேயும் எம்பால் சீற்றங்கொள்ளுதற்குநினைத்ததேன்?" என்று வினவினன்.

"அரசே, கேள். நான் எந்தச் சபைக்குச் செல்வதென இசைந்தாலும் அங்குத் தலைவாயில் காத்துக்கிடக்கும் பழக்கமில்லேன். நினதாட்கள் என்னைத் தடுத்ததால் சிறிது சினம் வந்தது. நான் வாழச் சிறப்படையும் பதியும் இராசமாபுரம். என்னால் பெருமையுற்ற பெயரும் புஜங்கன். யான் இங்குப்போந்த காரியம் இன்னதெனப் பின்னர் இயம்புவேன்."

"ஐய, நான் மறையோடு நற்றமிழும் கற்ற அந்தணக்கவி நீயென்று இக்காவலாளர் எமக்குத் தெரிவித்தனர். புலவனாயின் எம்வயின் விழைந்த பொருள் நினது. பூசுரனாயின் உன்னரும் ஆசிகள் தந்து என்னை வாழ்த்துவாய். எனினும் நீ பகர்ந்தவிடையினால் இருவரும் அல்லன் என எண்ணவே இடமுளது."

"அடக்கம் உள்ளவன் நீயோ அரசே, செருக்கைப் பழிக்கின்றாய்!"

"தருக்கும் செருக்கும் எம்பிரான் புவனேச்வர பார்த்திபனிடத்தில் எள்ளளவும் தங்கியில," என்று குணபாலன் எடுத்துக் கூறினான்.

"தருக்கும் செருக்கும் தங்கியிலதேல் எம் ஏமாங்கதம் புரந்திடும் சீவகன் வழித்தோன்றல் சிங்கமுக வேந்தனை முன்னாள் பரிபவப் படுத்தியதேனோ?"

"ஐய, எந்நாளும் செய்திலம். வாய்தந்தன கூறுகின்றாய். மன்னர் பெருமை மன்னர் அறிவர். நீ பேற்று மிக்குற்றத்திற்கு நானோ பாத்திரன் அல்லன்."

"புவனேச்வர வேந்தே, நீ பொய்யும் பயின்ற துண்டோ?"

"புதியோய், இவ்வவைக்குள் முடுகி யெம்மை நா வந்தவாறு நிந்திப்பதற்கு எங்குப்பெற்றனை உரிமை? இக்கடாரநாடு முழுதும் ஊமையர்வாயிலன்றிப்பொய் தேடிப் பயன்படாது."

"மற்றினிப் பேசுவதெல்லாம் மெய்யேயாயின் இது கூறுதி. இரண்டாண்டுகளுக்குமுன் எம் ஏமாங்கத நாட்டுப் புலவன் ஒருவன் நினதவைக்குப் போந்தது நினைவுண்டோ?"

"ஆம், அளவிலாப் பரிசிலும் தந்தனம்"

"ஆயின், அப்புலவன் எம்மிறைவன் சிங்கமுகனைப் புயல்போல் நல்கும் வள்ளல் எனப் புகழ்ந்தபோது நீவிரெல்லாம் அங்காந்து சிரிந்ததில்லையோ! ஏனது ஐய, ஏனது! மாரியொடு இகலி இவ்வுலகு புரந்திடும் எம் கொற்றவன் நகைத்தற்கு இலக்காகும் வசையன் எனச் சிரித்து நீ தீராத பழியேபூண்டாய். அன்னதற்குத்தரம்கேட்கவே வந்திருக்கின்றேன்."

புவனேச்வர வேந்தன்திகைப்புற்று மந்திரியின் முகத்தைப் பார்க்கக் குணபாலன் சிறிதளவு சிந்தித்து, "அரசே, இப்புதியவன் புகல்வது வியப்பைத் தருகின்றது. ஏமாங்கத தேயத்திலிருந்து ஒரு கவி வந்ததும், தன்னரசனை யவன் மேகம்எனப் புகழ்ந்ததும் நிகழ்ந்தன. நாம் சிரித்ததும் உண்டு ஆனால் அச்சிரிப்பின் சாரத்தை மறைத்துத் தன்னரசன்மாட்டு அக்கயவன் புறங்கூறியுள்ளான்போலும்," என இயம்பி ஆலவாய் ஐயனாரை நோக்கிக் கண்குறி போக்கினான். இயம்பியது கேட்ட புஜங்கன், "சிரித்த கருத்துதான் மற்று என்னவோ" என்று சினந்திட, மந்திரி, "உன் நாடு வளர்த்த கவியின் சுவையற்ற உவமைக்குச் சிரித்தோம். பாட்டுடைத் தலைவனைப் பழித்திலேம். கொடையென்றால் முகிலன்றி உவமைப் பொருள்தான் வேறொன்று இல்லையோ! எல்லோரும் சொல்லிச் சொல்லிச் சலித்த எச்சிலை மீண்டுமிவன் பருகுமாறு அளித்த பேதைமையை இகழ்ந்தோம்," என முடித்ததும், ஆலவாய் ஐயனார், "கொடையாளருக்கு உவமையாய்க் கொண்டலை ஆக்குவதில் ஒரு குற்றமும் உளது. மேகம் அகம்கறுகி இடியிடித்தல்லாது வழங்குவதில்லை. அது சினத்துடன் வசையும் சேர்த்துத் தருமவர்களுக்கே நிகராகும்," எனத்தொடுத்தான். (தொடரும்)

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இன்றுமுதல் வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவுசெய்து தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. மூந்துங்கள். விலை அணா 8.

அமிர்த குணபோதினி

இத்போன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனாம்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநுட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய

ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனை வருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

ஆடம்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது செட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூரஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | **313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | **313, Esplanade, MADRAS.**

வர்த்தமானம்.

பத்திரிகைப் பறி முதல்:—டில்லியில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'காந்தி' என்னும் பத்திரிகையில் ஆக்ஷேபணைக்கிடமான கட்டுரை வெளியானதென்று சென்றவார இதழ்களில் 300 பிரதிகள் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டனவாம்.

***

கஸ்டம்ஸ்குமாஸ்தாவிற்குத் தண்டனை:-பம்பாய்க்கஸ்டம்ஸில் வேலைபார்த்துவந்த மணிலால் மிச்ரா என்பவன், 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலான கஸ்டம்ஸ் பணத்தை அபகரித்த குற்றத்திற்காக ஜஸ்டிஸ் தாவார் அவனுக்கு 4 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார் என்று பம்பாய்ச் செய்தி கூறுகின்றது.

***

ரயில்வே வேலை நிறுத்த வழக்கு:—தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்திய சமயம், சதியாலோசனை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியாரும், சர்க்கார் என்பவரும் மற்றும் பலரும், திருச்சி மாஜிஸ்டிரேட்டால் செஷன்ஸிற்குக் கமிட்டு செய்யப்பட்டார்கள் என்று தெரிகின்றது.

***

"பாரதி:—இந்தியரனைவரும் ஒரு தாயின் மக்கள் என்ற மேலான கொள்கையுடன் இத்தேசத்தில் வாழ்ந்து தேசாபிவிருத்தியை நாடி உழைக்கும் தேசீயப் பத்திரிகையாகும். இது ஜனவரி 1ஆம் முதல் மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து வெளிவரலாகின்றது "தேவாங்க மித்திரன்" மாஜி ஆசிரியரும், பத்திரிகைகளுக்கு அடிக்கடி வியாசங்கள் எழுதிக்கொண்டிருப்பவரும், இப்பொழுது "ஏல விவசாயி" என்னும் மாசிகையைத் திறமையுடன் ஆசிரியராயிருந்து நடத்திக்கொண்டு வருபவருமான தேவாரம் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி செட்டியார் அவர்கள் இதன் ஆசிரியரும் சொந்தக்காரருமாவர்.

***

இராம கிருஷ்ண மடத்தார் தர்மம்:—இரங்கூனில் இராம கிருஷ்ண மடத்தார் அவர்கள் மேற்பார்வையில் நடந்த வைத்தியசாலையில் பிரசவ உதவிக்கெனக் கிழக்கு இரங்கூனில் பிரசவ வைத்திய வார்டுகளைக் கட்டி முடித்தனர். இரங்கூன் கவர்னர் ஸர். சார்லஸ் இன்ஸ் இக்கட்டடத்தைத் திறந்துவைத்தார். அப்பொழுது கவர்னர் கூறியதாவது:—இரங்கூன் இராம கிருஷ்ண மடத்தின் தலைவரான பரமானந்தர் இக்கட்டடங்களைக் கட்டியது ஏழைகளுக்குப் பேருபகாரமாகும். இங்குப் பல வைத்திய நிபுணர்கள் ஊதியங் கருதாது வந்து உதவி தருகின்றது போற்றுதற்குரியது. இவ்வயித்தியசாலை நன்கு நடக்குமாறு பொது ஜனங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

***

நெசவுத்தொழில் :—இந்தியஜவுளி வியாபாரத்தைப் பற்றிய கணக்கொன்றை 'லோகோபகாரி' வெளியிடுகின்றது:—

ஏற்றுபதி:—

வருஷம்			பீஸ்கள்.
1814	...	...	12,66,608
1821	....	...	5,34,459
1828	...	...	4,22,504
1835	...	...	3,06,086
1842	...	...	1,81,224
1849	....	...	36,152

இறக்குமதி:—

வருஷம்			கெஜம்.
1814	...	....	8,18,208
1821	...	...	1,91,38,726
1828	....	....	4,28,22,077
1836	...	....	5,17,77,277
1875	...	....	61,64,36,752
1905	....	...	137,83,00,234
1925	...	....	148,37,13,446

***

ஆப்கன் புரட்சி:--ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட புரட்சி நிலையில் மாறுதல்கள் ஒன்றும் ஏற்படவில்லை. பாக்கோ சாக்கோ திடீரெனப் படைதிரட்டி அரசாங்கத்தைப்பற்றிய செய்தி இந்நாளில் ஒருஆச்சரியமான சம்பவமாகும். ஷின்வாரி வகுப்பினர் இவன் அரசனுவதை விரும்பாது ஒருபடை திரட்டி வருகின்றனர். சிறு சண்டைகளும் நிகழ்கின்றன. அமனுல்லா காந்தஹாரில் கலகக்காரனை அடக்கி இழந்த சிம்மாஸனத்தை மீண்டும் கைப்பற்ற முயன்றுவருகின்றார் என்று தெரியவருகின்றது. படையின் பலத்தால் வெற்றிகொள்வது வேறு, நாட்டை ஆள்வதென்பது வேறு என்பதை பாக்கோ சாக்கோ இப்பொழுது உணரலாகின்றார் என்றும், அவர் எதிரிகளினிடம் காட்டும் கருணையும், ஜனங்களை அவர்பக்கம் முழுதும் இழுக்கது விடவில்லை என்றும் பெஷாவரிலிருந்து வந்த செய்தி கூறுகின்றது. மேலும் எளிதில் சாக்கோ பாக்கோ அமீர் ஆனது பட்டம்பெறும் ஆசையை பலருக்கு உண்டுபண்ணியுள்ள தென்றும், ஆகவே சீக்கிரத்தில்இரத்தம் சிந்தாது அமைதி ஏற்படாதென்றும் தெரியலாகின்றது. இந்திய முகமதியர்கள் அமனுல்லாகானுக்கு உதவி செய்யவெண்டி முயல்கின்றனர். பம்பாய், கல்கத்தா, பஞ்சாப் முதலிய விடங்களில் அமீர் அமனுல்லாக்கான் சார்பாகக் கூட்டங்கள் கூடித் தீர்மானங்கள் செய்யப்படுள்ளன. ஆப்கானிஸ்தானத்தின் நிலை இந்தகையது.

***

தென்னிந்திய செங்குந்தர் மஹாநாடு:—தென்னிந்தியாவிலுள்ள செங்குந்த வகுப்பார் மஹாநாடு கோயமுத்தூரில் ஜனவரி மாதம் 19, 20 தேதிகளில் கூடியது. அம்மஹாநாட்டு வரவேற்புச் சபைத்தலைவரான கோவைச் செல்வர் ஸ்ரீமான் V. S. செங்கோட்டையா முதலியார், தமது வரவேற்புரையில் கூறியதாவது:—

கல்வி, வர்த்தகம், செல்வம்முதலியபலவளம் படைத்திருந்த செங்குந்த மஹா ஜனங்கள் தற்காலம் நிலைதடுமாறி நிற்கின்றனர். எங்கெங்கும்,வகுப்பு முன்னேற்ற வேலை நடக்கும் சமயம், நாம் மாத்திரம் கண்ணைமூடிக் கொண்டிருத்தல் கூடாது. ஒட்டக்கூத்தர், இரட்டையர், படிக்காசுப்புலர் ஆய பெரும்புலவர்கள் நமது வகுப்பைச் சேர்ந்தவர்கள். அரசாங்கங்களிலும் நம்மவர் பெரும்பதவி வகித்துள்ளார்கள். ஒட்டக்கூத்தர் சோழன் அவைப் புலவராயும் மந்திரியாகவும் இருந்துள்ளார். மீண்டும் நாம் அப்பழம் பெருமையைப் பெறவேண்டும். நாம் ஒன்று சேர்ந்து, சங்கங்கள் ஸ்தாபித்து நம்மவர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டாலன்றி, நாம் அரசியல் முதலிய பலதுறைகளில்நமக்குரியதான ஸ்தானங்களை வகிக்கமுடியாது. நாம் நமது சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்வி போதிக்கவேண்டும். நம்மிற் சிலரிடை யிருந்துவரும் பொட்டுக் கட்டும் வழக்கம் நிற்கவேண்டும். கைத்தொழில், வர்த்தகம், அரசியல் துறைகளில் நாம் முன்னேறுவதற்கானவை செய்யவேண்டும். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு, அதில் வாழும் எல்லா வகுப்பினரின் முன்னேற்றமும் அவசியம். நாட்டின்நலத்தையும், நம்மவர் நலத்தையும் கருதி நாம் முன்னேற முயலுவோமாக.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்ட் செய்யாதது
உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினன்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கோடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனம்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189040

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)